விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆடி 12 ஜுலகஸ் 20 இதழ் 168

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 28-7-1986

83 ஜூலை நினைவு தினம்

## மட்டுநகரில் ஊர்வலம்மீது சூடு: ஒருவர் பலி;பலர் காயம்

யாழ்ப்பாணம், திங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஊர்வலம் ஒன்றை நடத்திய பொதுமக்கள் மீது பொலிஸ் 'காமாண்டோக்கள்' துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் ஒருவர் பலியானதாகவும், பலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

83 ஜூலையில் இடம்பெற்ற தமிழர் படுகொலைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த வெள்ளிக்கிழமை இவ்வூர்வலம் நடைபெற்றது. புலிகளின் குரலில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (மா)

## உலக வங்கி நிதிஉதவி இடைநிறுத்தம்!

யாழ்ப்பாணம் திங்கள் இரணைமடுத்திட்ட திருத்த வேலைகளுக்கென உலக வங்கியினால் ஒதுக்கப்பட்ட நிதியுதவி இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

270 லட்சரூபா நிதி, திட்ட வேலைகளுக்கென ஒதுக்கப்பட்டிருந்தது. இதில் 95 லட்சம் ரூபா கடந்த ஜூன் மாதம் வரை செலவிடப்பட்டிருந்தது. எஞ்சிய தொகையே அரசினால் இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

# இலங்கை அரசு யோசனைகள்: ராஜீவ்-தமிழ்போராளிகள் பேச்சிலே தீர்வு தங்கியுள்ளது!

(நமது நிருபர் வ. மகாலிங்கம்)

"இலங்கை அரசு சமர்ப்பித்துள்ள புதிய யோசனைகள் குறித்து இலங்கைத் தமிழ் போராளிகளுடன் இந்தியப் பிரதமர் நடாத்தும் பேச்சுக்களிலேயே இலங்கை இனப்பிரச்னையின் தீர்வு தங்கியுள்ளது" என்று அபுதாபியிலிருந்து வெளியாகும் 'கல்ப் நியூஸ்' (வளைகுடாச் செய்தி) என்றபத்திரிகையின் ஆசிரியத் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்பத்திரிகையின் கடந்த வார வெளியீட்டிலேயே இவ்வாறு ஆசிரியத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது; இந்தியாவின் ஆசியுடன் த. வி. உ. பினர் இலங்கை அரசுடன் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளனர். ஆயினும் இலங்கை அரசின் புதிய யோசனைகள் குறித்து இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி இலங்கை தமிழ் போராளிகள் குழுக்களுடன் மேற்கொள்ளும் பேச்சுக்களிலேயே இலங்கைஇனப்பிரச்னையின் தீர்வு தங்கியுள்ளது.

மேலும் ஜனாதிபதி ஜயவர்த்தன தமிழ் மக்களுக்குக் கூடுதலான சுயாட்சி வழங்கப்படல் வேண்டுமென ராஜீவ் வலியுறுத்திவந்துள்ளார். அதே வேளையில், இலங்கை பிரிக்கப்படக் கூடாதெனவும் கண்டிப்பாக கூறிவந்துள்ளார்.

ஜயவர்த்தன அரசு இராணுவத் தீர்வின்பக்கம் சாய்ந்த காலங்களில் இந்தியப்பிரதமர் அவ்வித மனப்போக்கை கண்டிக்கத் தவறவில்லை. அந்த வேளையில், தமிழ் நாட்டில் தமிழ்ப் போராளிகள் சார்பில் அப்பிரதேச மக்கள்வெளிப்படையாக ஆதரவு தெரிவித்துவரும் போது பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பது கடினமானதென்பதை இந்திய அரசு நம்பக் கூடிய வகையில் ஜயவர்த்தன அரசு வலியுறுத்தத் தவறிவிட்டது.

இதில் முரண்பாடானநிலைப்

(4- பக்கம் பார்க்க)

## யாழ். கோட்டைப்பகுதியில் இருதினங்களாக ஷெல், துப்பாக்கிப் பிரயோகம்

யாழ்ப்பாணம், திங்கள் யாழ் கோட்டைப்பக்கமாக நேற்று முன்தினம் இரவும், நேற்று மாலையும் துப்பாக்கிச் சூடும் அதனைத் தொடர்ந்து ஷெல் தாக்குதலும் இடம் பெற்றன.

நேற்று முன்தினம் இரவு 11 மணி தொடக்கம் இரவு 2 மணி வரை இடம் பெற்ற சம்பவத்தின் போது எதுவித சேதமுமேற்படவில்லை. எனினும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தத்தாலும் ஷெல தாக்குதலாலும் யாழ் நகர்ப்பகுதி மக்கள் பீதியடைந்திருந்தனர்.

மண்டைதீவு முகாமிலிருந்து நேற்று முன்தினம் நள்ளிரவு இராணுவத்தினர் கோட்டை முகாமுக்கு நடந்து வந்து சேர்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுப் பிற்பகல், யாழ். கோட்டைக்கு வடக்குப்பக்கமாகவுள்ள சேதப்படுத்தப்பட்ட றீகல் தியேட்டர் முன்றலில் சிலர் நடமாடியதாகவும் அதனைத் தொடர்ந்து துப்பாக்கிப்பிரயோகமும் ஷெல் தாக்குதலும் கோட்டை முகாமிலிருந்து இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## பொலனறுவையில் 36 ஊர்காவல்படையினர் பலி!

### ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், திங்கள் பொலனறுவை மாவட்டத்தில் தமது இராணுவப் பிரிவாகிய மக்கள் விடுதலைப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட இரு தாக்குதல் சம்பவங்களில் 36 ஊர்காவல்படையினர் கொல்லப்பட்டதாக 'ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி' (ஈ.பி ஆர். எல். எவ்.) விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும்

(4ம் பக்கம் பார்க்க)

## 50 புதிய கமாண்டோக்கள்

யாழ்ப்பாணம், திங்கள் இலங்கை இராணுவ பிரிவினருக்கான புதிய 'கமாண்டோ' பிரிவில் புதிதாக 50 பேர் சேர்க்கப்படவுள்ளனர்.

இப்பதவிக்காக சுமார் எண்ணாயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனரென இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (சிவ)

★ அகால மரணங்கள்

## இறப்பு 'அத்தாட்சி'யின்றி பல குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், திங்கள்.

தற்போதைய சூழ்நிலையில் அகாலமரணத்தைத் தழுவுவோரின் சடலங்களைப் பெற முடியாத சந்தர்ப்பங்களும் நிலவுகின்றன.

இதனால் இறந்தவர்களுடைய இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைப் பெறமுடியாமல் இருப்பது பல குடும்பங்கள் பலவகைகளில் நஷ்டமடைகின்றன.

எனவே மேற்கூறியவாறு இருந்து போகின்றவர்களுடைய இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைப் பெறுவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்காக பிரஜைகள் இணைப்புக்குழு நேற்று யாழ் இந்து விடுதியில் கூடி ஆராய்ந்தது.

(4ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நோக்கி லொறிகள்

வவனியா திங்கள் வவனியாநொச்சிமோட்டையில் கடந்த நான்கு தினங்களாகத் தரித்து நின்ற வடபகுதியைச் சேர்ந்த சுமார் 25 லொறிகளில் பெரும்பாலா

(4- ம் பக்கம் பார்க்க)

## இராணுவம்மீது கண்ணிவெடித்தாக்குதல்: புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், திங்கள் திருமலை மாவட்டத்திலுள்ள கட்டைபறிச்சான் என்னும் இடத்தில் ரோந்துசென்ற ராணுவத்தினர்மீது தரைக் கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றை தமது இயக்கப் போராளிகள் மேற்கொண்டதில் இராணுவத்தினர் தரப்பில் சேதமேற்பட்டதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கபபட்டுள்ளது

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நேற்றுக்காலை 6 மணியளவில் கட்டைப்பறிச்சான் ராணுவ முகாமில் இருந்து மூதூர் ராணுவ முகாமிற்கு ராணுவத்தினர் 4 வாகனங்களிலும் கால்நடையாகவும் 100 க்கும் மேற்பட்ட ராணுவத்தினர் நேற்று செல்கையில் கட்டைப்பறிச்சான் இராணுவமுகாமில் இருந்து கால் மைல் தொலைவில் எமதுதரப்பினர் நிலக்கண்ணியினை வெடிக்கச் செய்ததில் ராணுவத்தினர் நிலை குலைந்தனர். ராணுவத்தினர் தமதுதரப்பில் ஏற்பட்ட சேதங்களுடன் முகாம் திரும்பினர். இத்தாக்குதலின் போது எமது தரப்பில் எதுவித இழப்புக்களும் இல்லை. [மா]

## மரக்கறி மூடைக்குள் வெடி குண்டு?

யாழ்ப்பாணம், திங்கள் சிறுவனொருவன் நேற்று சந்தைக்குக் கொண்டுசென்ற மரக்கறி சாக்கு மூடையை சோதனையிட்ட இராணுவத்தினர் அம்மூடைக்குள் வெடிகுண்டொன்று கிடக்கக்கண்டு பிடித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவனியா புகையிரத நிலைய வீதியில் உள்ள தடைமுகாமில் இடம்பெற்ற சோதனையின்போதே சைக்கிளில் கொண்டுசென்ற மூடைக்குள் வெடிகுண்டிருக்கக் கண்டுபிடிக்கப்பட்டதாம்.

மரக்கறி மூடையைக் கொண்டுசென்ற அச்சிறுவன்

(4ம் பக்கம் பார்க்க)

## ரூ. $3\frac{1}{2}$ லட்சம்பெறுமதியான 'அபின்' கண்டுபிடிப்பு!

வவனியா, ஞாயிறு வவனியா ரெயில் நிலையத்தில கடந்த சனியன்று பெண் பிரயாணி ஒருவர்மீது சந்தேகம் கொண்ட ரெயில்வே உத்தியோகத்தர்கள் அந்தப் பெண்மணி மீது சோதனை நடத்திய பொழுது அவரது மடியிலிருந்து சுமார் மூன்றரை லட்சம் ரூபா பெறுமதியான அபின் கண்டுபிடிக்கப்பட்டது.

அபினுடன் கைதான இப் பெண்மணிவவனியாபொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார். கொழும்பு செல்லும்ரெயிலுக்காக அவர் காத்திருந்தாராம். [ஒ-ஆ]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

அச்சகத்திற்குரிய பேப்பர் வெட்டும் நல்ல நிலையில் உள்ள கட்டர் விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; சுவர்ணு 295/7, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். [C 3697]

Singer தையல் மெஷின், சாப்பாட்டு மேசை, கதிரைகள், ஹோல் செற், Play Pen, Cot, சில்வர், பித்தளை பாத்திரங்கள், கிளாஸ் வகைகள், றேடியோ, T. V, Show Case, கண்ணுடி மேசைகள், கட்டில் மெத்தைகள், Filter, அல்மாரி, National Blender, Volkswagen கார், மின் கேற்றல், கமரா, மின்விசிறி, நவீன தளபாடங்கள் உடன் விற்பனைக்குண்டு 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம், மாவடிச் சந்தியருகில். [C 3681]

Volkswagen 1300 மோட்டார் வண்டி 9 Sri 6000 series மிகவும் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. உடனே தொடர்பு கொள்க. Mack Auctioners and Brokers, 8, முதலாவது ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். Tel: 24791, 24836 (A-966)

## தேவை

எமது காரியாலயத்தில் நிரந்தராக கடமையாற்ற பெண்கள் இருவரும், கொழும்பு சென்றுவரக்கூடிய பிணைப் பணம் செலுத்தக்கூடிய ஆண் பிரதிநிதி ஒருவரும் தேவை. விபரங்களுக்கு: நிர்வாகி, சங்கர் ரவல் சேர்விஸ், 125, சிவன்கோவில் வடக்கு வீதி [வைத்தீஸ்வரா வித்தியாலய றேட்], யாழ்ப்பாணம். [C 3683]

தமிழ்தட்டச்சு யந்திரங்கள்-க்மூக சேவை நிறுவனம் நடத்தவிருக்கும் மாதர் தொழிற்கல்வி நிலையத்திற்கு உகந்தவை. விளம்பர இல. C-3725 C/o, ஈழநாடு, யாழ்ப்பாணம். [C-3725]

நல்ல நிலையிலுள்ள Honda C 90 (Vespa) ஸ்கூட்டர்தேவை தொடர்பு: J. P. T Ltd, 3, நவீன சந்தை [மேல்மாடி], யாழ்ப்பாணம். (A-963)

## சேவை

சென்றல் மோட்டோர்ஸ் மின் மோட்டர் தண்ணீர்பம் மின்விசிறிகள் மற்றும் பல ரக மின்மோட்டர்கள் மின் உதிரிப்பாகங்கள் அனைத்தும் சிறந்த முறையில் குறித்த தவணையில் திருத்தியும் றீவைண்டிங்கும் செய்து கொடுக்கப்படும் 484 K.K.S Road, Sivalingappuliady, Jaffna. (C-3731)

நவீன யந்திரமூலம் அனுபவமிக்க தொழிலாளர்களினல் கச்சான் முழுப்பருப்பாக பொத்தமாகவும், சில்லறையாகவும் உடைத்துக்கொடுக்கப்படும். விபரங்களுக்கு: M. G. M., 777, K K S Rd., Jaffna. T P. 22611. [A 926]


## மணப்பந்தல்

(1) வேளாளர் கிறிஸ்டியன் ஆசிரியைக்கு 36 - 45 வயதுக்கிடைப்பட்ட எஞ்சினியர் அதனோடு ஒத்த மணமகன் தேவை இளைய சகோதரர் எஞ்சினியரோடு மாற்றுச் சம்பந்தம் செய்யலாம். கிறிஸ்டியன் அல்லாதோரும் விண்ணப்பிக்கலாம். (2) அழகிய படித்த இந்து குருகுலமணப் பெண்ணுக்கு 30 - 37 வயதிற் கிடைப்பட்ட உத்தியோக மணமகன் தேவை. மாற்றுச் சம்பந்தமும் உண்டு (3) இந்து வள்ளுவர் இன அரசாங்க மணப்பெண்ணுக்கு 40 வயதிற்குட்பட்ட மணமகன் தேவை. (4) கோவியர் இந்து மணப்பெண்ணுக்கு Doctor எஞ்சினியரோடு ஒத்த மணமகன் தேவை. மூத்த சகோதரன் எக்கவுண்டனோடு மாற்றுச் சம்பந்தம் செய்யலாம். (5) எம்மிடம் டொக்டர் எஞ்சினியர் எக்கவுண்டன், ஆசிரியர் மணமக்கள் எல்லா இனமதத்திலும் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (C-3727)

## வகுப்புகள்

T. V. பயிலுனர்க்கான புதிய வகுப்புகள் 02-08-86 ஆரம்பமாகவுள்ளன. பயிலுனரின் வசதிக்காக சனி, ஞாயிறு [இரு தினங்கள்] மட்டும் வகுப்புகள் நடத்தப்படும். பயில விரும்புபவர்கள் 01-08-86 முன் தொடர்புகொள்ளவும். விலாசம்: S. குணளன், ரெலி கோனர், சாவகச்சேரி. [C 3701]

## 31-வது நாள் நினைவஞ்சலி



வினசென்ற் யோசேப் ஆண்டவன் படைப்பு: 7- 11- 1917
அரக்கர் அழிப்பு: 28- 6- 1986

மண்ணிலே உந்தன் மா
உடலோ மாண்டதையா
கண்ணிலே நிகழும்
உந்தன் காட்சியோ
தெரியுதையா
எண்ணவே நெஞ்ச
மெல்லாம் ஏங்கித்
தவிக்குதையா
விண்ணிலே எம்
சனுக்காய்
வேண்டுவீர் நிதமுமையா
முன்பே வஞ்சர் வெடி
பட்டதுவோ
வாழ்க்கைத் துணையாள்
தனியளாய் தான் துடிக்க
பிள்ளைகள் சகோதரர்கள்
உற்றார் உறவினர்கள்
துயர் கொண்டு துடிக்க
மீளாத்துயில் கொண்ட
எம் தெய்வமேமீளாயோ.

இவரின் பிரிவால் என்றும் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள், மைத்துனர்கள், உற்றார். உறவனர்கள்.
18, 4ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
(C 3734)

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை.

### கைதடி சித்த மருத்துவபீடத் திருத்த வேலைகள்

யாழ்ப்பாணப் பல்கலைக் சழகத்தில் மேற்குறிப்பிட்ட வேலையை மேற்கொள்வதற்காக தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. ஒப்பந்தகாரர் யாழ். பல்கலைக் கழகத்தில் அல்லது கட்டடத்திணைக்களத்தில் ரூபா 2 இலட்சத்திற்குப் பதிவுசெய்திருத்தல் வேண்டும். இதற்கான கேள்விப் பத்திரங்களை ரூபா 100/- கட்டணமாகக் செலுத்தி ஆவணி மாதம் 6ந் திகதி வரை வேலைப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 11- 08- 86 முற்பகல் 10 மணி ஆகும்.

பதிவாளர்
(A964)

## யாழ்ப்பாண அபிவிருத்திச் சபை, உப- அலுவலகம், மானிப்பாய் பட்டினம், மானிப்பாய்.

### ஏல விற்பனை

யாழ்ப்பாண அபிருத்திச் சபையின் மானிப்பாய் பட்டின உப- அலுவலகத்தில் எதிர்வரும் 7-8-86 ம் திகதி வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு பின்வரும் பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

வெற்றுத்தார்ப் பீப்பாக்கள், மேசைகள், றேடியோப் பெட்டி, பழைய மரச்சில்லுகள், பனைமரங்கள் (தறிக்கப்பட்டவை), சீமேந்து கொங்கிறீற் தூண்கள் [பழுதானவை), றெயில் தண்டவாளம், பழைய பேப்பர்கள், பழைய மரத்தூண்கள், பழைய சஞ்சிகைகள் ஆகியவை.

ஏலத்தில் பங்குகொள்ள விரும்புவோர், ரூபா 10/- அனுமதிக்கட்டணம் செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற்றுக் கொள்ளவேண்டும். இக்கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது.

அங்கீகரிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்வித் தொகையை அன்றைய தினமே செலுத்தி குறிப்பிட்ட பொருளை அப்புறப்படுத்தல் வேண்டும். அன்றைய தினம் பணம் செலுத்தத் தவறியவர்களின் கேள்விகள் ரத்துச் செய்யப்படும்.

மேற்படி ஏல விற்பனவு சார்பான விபரங்கள்யாவும், அலுவலக நேரத்தில் இக்காரியாலயத்தில் விசாரித்து அறிந்து கொள்ளலாம்.

க. இராஜசுந்தரம்,
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்,
யா. அ. ச. உப-அலுவலகம், மானிப்பாய் பட்டினம்.

யாழ். அபிவிருத்திச்சபை,
உப- அலுவலகம்.
நகரமண்டபம்,
மானிப்பாய் பட்டினம்.
21- 7- 86. (A 965)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## இன்றைய பலன்

மாதம்: ஆடி
திகதி: 12 (1986 7 28)
கிழமை: திங்கள்
திதி: ஸப்தரி மி ப. வரை
நட்சத்திரம்: அச்சுவினி பி.இ. வரை

மேடம்: மனதில் அமைதி குன்றும் உடல் நலம் பாதிக்கப்படும் சுகாதாரத்தைப் பேணவும்

இடபம்: குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாகக் காணப்படும். நண்பர் ஒருவரின் வருகை உற்சாகத் தைத்தையளிக்கும்

மிதுனம்: கட்டி வெல்லம் போல் இனிக்கும் வாழ்க்கை. காதலர் எண்ணங்கள் கைகூடும். அவசரப் போக்கைத் தவிர்க்கவும்.

கடகம்: வியாபாரத் துறையில் விருத்திக்கு இடமுண்டு, செய் தொழில் சிறப்படையும். தாய் வழிச் சுகக் குறைவும் உண்டு

சிங்கம்: பிள்ளைகள் மூலம் பெருமை தரும் சம்பவங்கள் இடம் பெறும். இல்லத்தில் தென்றல் வீசும். தானிய லாபத்திற்குமிடமுண்டாம்.

கன்னி: விவசாயிகள் வீழ்ச்சிக்குள்ளாகுவீர்கள். மனச் சஞ்சலம் தோன்றும். திருடர் பயத்திற்குமிடமுண்டு. அவதானம் வேண்டும்.

துலாம்: குடும்ப வழியால் நிம்மதி பிறக்கும். பெரியவரின் வழிகாட்டுதல் நன்மை தரும். சுற்றுடவிலும் மதிப்புயரும்.

விருச்சிகம்: வாழ்க்கையிலும் பிரிவுத் துயர் வாட்டும். ஏக்கத்தின் சாயல் துன்பத்தைத் தரும். கடமையில் கவனம் வேண்டும்.

தனுசு: குடும்பத்திலும் குறிக்கோள் வெற்றிக்கிடமுண்டு. அறவழிகளை மனம் நாடும். தெய்வ வழிபாடு மேலோங்கி நிற்கும்.

மகரம்: புண்ணிய விருப்புகளில் மனம் நாடும். வெளியிடத்துத் தொடர்புகள் நன் மாற்றத்தை ஏற்படுத்தும். மனைச் சிறப்பு முண்டு.

கும்பம்: பிறர் வரவு நன்மை தரும். சகோதர மன மகிழ்சிக்கிட முண்டு. சிலருக்கு தொழில் வாய்ப்புக் கிட்டும்.

மீனம்: ஆசை அலைகளினல் அவதிப் படுவீர்கள். ஆணவப் போக்கு பகையைச் சம்பாதிக்கும். மனக் கவலைக்கு இடமளியாதிருக்கவும். தெய்வ வழிபாடு நலறு.

திருமலை ரவீந்திரன்

## மண்ணில் இருந்து விண்ணிற்கு

### அஞ்சலி 86



அமரா
பொன்னையா கதிரவேலு
(18-4-1916 —28-7-1983)
மதச்சடங்குகள் 24 - 7 - 86 ல் இலண்டனில் நடைபெற்றது.
[C-3607]


## பிரயாண ஒழுங்குகள்

கனடா ஜேர்மனி பிரான்ஸ் டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்
பாஸ்போட், பொன்ட் (BOND)
விஸா, ரிக்கற் ஆகியனவும்
செய்து கொடுக்கப்படும்.

**INTERSUN GROUP,**
சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரி அருகாமை),
மானிப்பாய்.
(A-787)


## தேவை

### திருகோணமலை நிருபர்

'ஈழநாடு' தேசிய தமிழ்த் தினசரியின் திருகோணமலை மாவட்டச் செய்திச்சேவைக்கான நிருபர் உடன் தேவை. விண்ணப்பதாரிகள் தமிழ், ஆங்கில மொழித் தேர்ச்சியும் சிறந்த கல்வித்தகைமையும் செய்திச்சேவையில் அனுபவமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும். வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவையாளரின் சான்றிதழுடன் பிரதியை இணைத்து சொந்தக்கையெழுத்தில் சுயவிபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பங்கள் 31-07-1986 வியாழக்கிழமைக்குப் பிந்தாமல் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும் விண்ணப்ப மேலுறையின் இடதுபக்க மேல்மூலையில் 'திருகோணமலை நிருபர் பதவி' என்று குறிப்பிடுதல் அவசியமாகும்.

நிர்வாகி,
ஈழநாடு லிமிட்டெட்,
த. பெ. இல 49,
யாழ்ப்பாணம்.
[A-948]

### மணிவாக்கு

தீயபழக்கங்களை நீக்குவதற்கு ஒரேவழி நல்ல பழக்கங்களை இடைவிடாது பழகிவருதலே இவ்வாறு செய்வதால் தீயபழக்கங்களால் ஏற்பட்ட பண்புகள் அடக்கப்பட்டு மாற்றமடையும் ஒருவனை ஒருபோதும் திருத்த முடியாது என்று கூறாதீர்கள். நல்ல பழக்கங்களால் தீயபழக்கங்கள் மறைந்துவிடும்.

— விவேகானந்தர்.

## நமது நோக்கு

# அர்த்தமுள்ள எதிர்காலம்

"உணர்ச்சிகள் தூண்டப்பட்டுவிடும்போது, அறிவு தன்னைச் சுதாகரித்துக்கொள்வதற்குச் சிறிது காலம் எடுக்கவே செய்யும்".

இவ்வாறு கூறியிருப்பவர் உலக தத்துவஞானி எவருமல்ல; ஒரு போர்வீரர். அதுவும் புரட்சியின் மூலம் பதவிக்கு வந்து ராணுவ ஆட்சியின் தலைமைப் பீடத்தில் அமர்ந்திருக்கும் ஒருவர் பொதுவாழ்வில் அவர் பெற்றுவிட்ட அனுபவங்கள் இவ்வாறு அவரைப் பேச வைத்துள்ளன.

அண்மையில் இலங்கை வந்திருந்த பங்களாதேஷ் ஜனாதிபதியும், பிராந்திய ஒத்துழைப்புக்கான தென் ஆசிய சங்கத்தின் (S. A. A. R. C.) தலைவருமான லெப்டினன்ட் ஜெனரல் ஹுஸைன் முகம்மத் எர்ஷாத் அவர்களுக்கு இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அளித்த விருந்துபசாரத்திலேயே மேற்படி கருத்தை அவர் வெளியிட்டார்.

"உங்கள நாட்டில் அமைதியும் சமாதானமும் சமீப காலத்தில் குழுப் போராட்டங்களாலும் வன்செயல்களாலும் குலைந்துபோயிருப்பதை நாம் அறியாமலில்லை. இலங்கை மக்கள் தாங்களே தங்களுக்குள் ஏற்பட்டுள்ள வேறுபாடுகளைத் தீர்த்துக் கொள்வார்கள் என்பதில் எமக்கு நம்பிக்கை இருக்கின்றது" என அவர் மேலும் கூறியிருக்கிறார்.

1983ம் ஆண்டு இங்கு வரவிருந்த ஜெனரல் எர்ஷாத் ஜூலைக் கலவரங்களின் காரணமாக வரமுடியவில்லை. மூன்று ஆண்டுகளின் பின்னர் இந்த விஜயம் இடம் பெற்றாலும் ஜூலைக் கலவரம் இடம் பெற்ற அதே சமயத்தில் இந்த நாட்டில் தங்கியிருந்துள்ளார் இருந்தபோதிலும் அன்றைய கலவரங்களின் கொடூரத்தன்மையை ஓரளவுக்காகுதல் அவரால் உணரமுடிந்ததா என்பது தெரியவில்லை.

ஜூலைக் கொடுமைகளை நினைவுறுத்தும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற கடையடைப்பு, ஹர்த்தால்பற்றி கொழும்புப் பத்திரிகைகள் இருட்டடிப்புச்செய்துவிட்டமையால் அதுபற்றியும் அவருக்குத் தகவல் கிடைத்திருக்க முடியாது.

இலங்கை மக்கள் தங்கள் பிரச்னையைத் தங்களுக்குள்ளேயே தீர்த்துக் கொள்ள முடியும் என்ற அவரது நம்பிக்கை நல்ல நோக்கம் கொண்டதாய் இருக்கலாம். ஆனால் அந்த நிலை கடந்து பிரச்னை ஓரளவு சர்வதேசமயமாக்கப் பட்டுவிட்டமையை யார் மறுக்க முடியும்?

ஏற்கனவே இந்திய அரசின் தலையீடு தவிர்க்க முடியாததாகிவிட்டது. இப்பிரச்னையினை சுமுகமாகத் தீர்த்துவைக்க அதன் தயவின்றி ஒன்றுமே செய்யமுடியாதென்ற நிலை. ஆயுதங்கள் வாங்கிய முறையிலும், ஆலோசனைகள் பெற்ற வகையிலும் பிரிட்டன், அமெரிக்கா, பாகிஸ்தான், இஸ்ரேல் போன்ற நாடுகளின் தலையீடும் இருக்கிறது. போதாக்குறைக்கு தமிழ் தீவிரவாதிகளை ஒழிக்க ஆங்கிலம் பேசும் கறுப்பர் வெள்ளையர்களைக் கொண்ட அனைத்து மேற்கு நாடுகளும் ஆயுத உதவிகளும் பண உதவிகளும் புரிய வேண்டுமென பகிரங்கமாகவே இலங்கை ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தமை பழைய விடயமல்ல.

எனவே ஏதோ ஒருமுறையில் வெளியார் தலையீடு இன்றி இந்தப் பிரச்னை தீராது என்ற கட்டத்தில் நிற்கின்றமையை ஜெனரல் எர்ஷாத் அறிதல் வேண்டும்.

மொழி இன பிரதேசப் பிரச்னைகள் எழும்போது பொதுவாகவே சிறுபான்மையினர் பெரும்பான்மையினரின் கொடுமைகளுக்காளாவது உலக இயற்கை. பெருந்தன்மையும் தூரதிருஷ்டியுமுள்ள தலைவர்களை அந்த நாடு பெற்றிருக்கும் பட்சத்தில் அங்கு சகல இனங்களும் குறையின்றி ஒருமித்து வாழ்வதற்கு வழிகாணப்படுவதுண்டு.

ஆளுவதற்கு ஒரு இனம் ஆளப்படுவதற்கு மற்ற இனம் என்ற நிலை ஏற்படும்போது பிரிவினைவாதம் தலையெடுப்பதும், வன்செயல்களால் அந்நாடு சீர்குலைவதும் சகஜம்.

'பங்களாதேஷ்' வரலாறே இதனை நன்கு உணர்த்துகின்றது ஜெனரல் எர்ஷாத் இதனை உணராதவர் அல்லர்.

ஜெனரல் எல்ஷாத்துக்கு வழங்கிய விருந்தின்போது இலங்கை ஜனாதிபதி பேசுகையில்; மீண்டும் இந்த நாட்டில் அமைதி ஏற்பட வேண்டும் என்பதில் நாட்டு மக்கள் கொண்டுள்ள ஆதங்கத்தை குறிப்பிட்டுள்ளார்

"அமைதியும், சௌஜன்யமும் திரும்பிவர வேண்டும் என முழு நாட்டு மக்களும் ஆர்வம் கொண்டிருக்கும் வேளையில் தங்களின் விஜயம் இடம்பெற்றுள்ளது" எனக்கூறிவிட்டு, "எமது சக்தியெல்லாம் பிரயோகித்து எமது மக்களுக்கு மீண்டும் அர்த்முள்ள ஒரு எதிர்காலத்தைப் படைக்க முடியும் என நம் நம்புகின்றோம்" என முடித்துள்ளார் ஜனாதிபதி.

இது வரை காலமும் இடம் பெற்றுள்ள அர்த்தமற்ற படுகொலைகள் தொடர்ந்தும் இடம்பெறாமல் தடுப்பதற்கு தமது சக்தியெல்லாம் பிரயோகிக்கப் போகிறாரா அல்லது சிங்கள மக்களுக்கு மாத்திரம் அர்த்தமுள்ள ஒரு எதிர்காலத்தைச் சமைப்பதற்கான மார்க்கம் ஒன்றை 'பாக்கட்டு'க்குள் வைத்துக் கொண்டுதான் இப்படிப் பேசுகின்றாரா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

## பொதுமக்களே

# இணைக்காத போராட்டங்கள் வெற்றிபெற முடியாது

சாவகச்சேரி, ஞாயிறு

"இன்று அரசுக்கும் கூட்டணிக்கும் இடையில் நடைபெறுகின்ற பேச்சுவார்த்தைகள் மூலம் தமிழ் மக்களின் பிரசினைகள் தீர்க்கப்பட மாட்டாது. தமிழ் மக்களின் பிரச்னைகள் தீர்வுகாணப்பட வேண்டுமேயாயின் பொது மக்கள் இணைந்த போராட்டங்கள் மூலமாகத்தான் அவை சாத்தியப்படும். பொது மக்களை இணைக்காத எவ்வித போராட்டங்களாலும்வெற்றி பெறமுடியாது."

இவ்வாறு சாவகச்சேரித் தொகுதி இணைப்புக்குழு அமைப்பாளரான திரு. அ. குலசேகரம் சாவகச்சேரி சந்தை மைதானத்தில் கந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஜூலை எதிர்ப்புநாள் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசும்போது உரையாற்றினார்.

திரு. குலசேகரம் அங்கு மேலும் பேசுகையில் 1983ம் ஆண்டு ஜூலை 25ல் ஆரம்பமாகிய கொடூர இனப்படுகொலைச் சம்பவங்கள் சங்கிலித் தொடர் போலத் தொடர்ந்த வண்ணம் இருந்து வருகின்றது. இந்நிலையில் நாம் எமது நிலைப்பாட்டை அகில உலக நாடுகட்கும் காண்பிக்கும் பொருட்டு இத்தினத்தை எதிர்ப்புத்தினமாகப் பிரகடனப்படுத்தி துக்கதினமாக அனுஷ்டிக்கின்றோம் எனக் கூறினார் [ஒ-இ]

## மக்கள் கருத்து

# ஆயரின் கூற்று அப்பழுக்கற்றது

வட மாகாணத்தில் பிரதானமானதும், கத்தோலிக்க தனியார் நிறுவனமுமான புனித-பத்திரிசியார் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. விழாவில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றிய அருட் பெருந்தகை கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் மேற்படி கல்லூரியின் முகாமையாளரும், உரிமையாளரும் ஆவார்.

ஆயர் தமது உரையில், தீங்கற்ற ஆனால் உண்மையான ஒரு கருத்தைக் கூறியிருந்தார். அக் கருத்தையிட்டு ஆத்திரமூட்டும் எண்ண வெளிப்பாடுகளை கொழும்பு ஆங்கில நாளிதழ்கள் தாங்கி வெளிவந்தன. அவற்றில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியது 'ஐலண்ட்' உள்ளத்தை ஊசியாகக் குத்தக்கூடிய அவ்வெளிப்பாடுகளை புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் கழகத்தின் உறுப்பினர்களாகிய நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு எமது சீற்றத்தையும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமது எண்ணங்களைத் தெரிவித்தோரின் எதிர்ப்புணர்வு அவ் விடயத்தில் அவர்களின் உடனடியான விரைவை மட்டுமல்ல ஆண்டகை அவர்களின் கூற்றின் உண்மையினால் தமக்குண்டான மனவேதனையை ஜீரணிக்கவோ, மறைக்கவோ முடியவில்லை என்பதையும் காட்டுகிறது. ஒருவேளை அது அவர்களின் சழிவிரக்கத்தின் பிரதிபலிப்பாகவும் இருக்கலாம்.

தனி மனிதரான எங்கள் ஆயர் அவர்களின் நடத்தைக்குக் களங்கம் கற்பிக்கும் வகையில் கட்டுப்பாடற்ற ஒரு மொழிநடையை சம்பந்தப்பட்டவர்கள் கையாண்டிருப்பதையிட்டு நாம் எமது மனவேதனையையும், துயரத்தையும் வெளிப்படுத்தும்இவ்வேளையில் பாதுகாப்பற்ற அப்பாவிப் பொதுமக்கள் அவர்கள் தலைவர்கள்மீது மிகக் கொடுமையான வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது கண்டு ஆழ்ந்த துயரடைகின்றோம்.

பெரியதோர் குற்றச்சாட்டைச் சுமத்தும் வகையில் ஆயர் அவர்கள் என்னதான் சொன்னார்கள்? தமிழர்கள் தமது முறையீட்டை ஐக்கிய நாடுகள் சபைக்கு எடுத்துச் செல்ல வேண்டிய ஒரு கட்டத்துக்கு வந்துவிட்டார்கள் என்றே அவர்கள் கூறினார்கள்.

இந்த நட்டின் அரசிடம் தமிழர்கள் தமது துயரத்தை மீண்டும் மீண்டும் எடுத்துச் சொன்ன போதும் அது செவிடன் காதில் ஊதிய சங்கான நிலையில், ஆண்டகை அவர்கள் அத்தகைய கருத்தைத் தெரிவித்ததில் என்ன தவறு?

ஆயர்தியோகுப்பிள்ளை அவர்கள் நேர்மையும் துணிவுமுள்ள ஒரு மாமனிதர். வன்முறை எங்கிருந்து, எவ்வடிவில் வந்தாலும் அதைத் துணிந்து கண்டிப்பவர் எத்தகைய வன்முறையில், எவர் ஈடுபட்டபோதும் அதை அவர் நியாயப்படுத்தவில்லை மாறாக கடவுளின் நேர்மையுள மனிதரான அவரின் கவனமெல்லாம் தமது மக்கள் வன்செயலுக்கிரையாகும் உயிர்களைப பற்றியதன்றி வேறல்ல.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் பேசும் மக்களின் உடல் உள ரீதியான வேதனையையிட்டு 2?0 மைல்களுக்கப்பாலுள்ளவர்கள் தமது சொல் செயல் மூலம் எப்படித் தீர்ப்பு வழங்க முடியும்? இச்செயல் உண்மை, நீதியை நகைப்புக்கிடமாக்குவதற்கு ஒப்பாகும்.

'பயங்கரவாதிகள்' எனச் சந்தேகிக்கப் படுபவர்களோடு, எத்தகைய தொடர்புமில்லாத சட்டத்திற்கமைவான - அமைதியை விரும்பும் - அப்பாவி மக்களுக்கெதிராக மிகக் கொடிய தீமை விளைவிக்கப்படும் போது, யாருமே குரலெழுப்பாத நிலையில், ஆயர் அவர்கள் மௌனமாக இருப்பார் ன எதிர்பார்க்க முடியாது.

ஆயுதப்படையினரால், மிலேச்சத்தனமாக, துண்டு துண்டாக வெட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்ட குருநகரைச்சேர்ந்த முப்பத்தொரு மீனவர்களின் மரணச் சடங்கு 11.6 86ல் நடைபெற்றது.

(5 ம் பக்கம் பார்க்க)

## நயினை நாகபூஷணி அம்மன்

# வருடாந்த மகோற்சவம் ஆகஸ்ட் 5-ல் ஆரம்பம்

வேலணை, ஞாயிறு.

யாழ். குடா நாட்டில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலைமைகளின் காரணமாகவும் தீவுப் பகுதியின் போக்குவரத்துச் சீர்குலைவுகளின் காரணங்களினாலும் ஒத்தி வைக்கப்பட்ட நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணியம்மன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் அடுத்த மாதம் 5ம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவ விடயம் சம்பந்தமாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் யாழ். செயலகத்தில் கூடிய மகாநாட்டில் இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தின் திருவிழாக் காலங்களில் கலந்துகொள்ள வரும் யாத்திரிகர்களின் பாதுகாப்புக்கருதி யாழ் மாவட்ட அரசாங்க அதிபர், யாழ் மாவட்ட இணைப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டு இதற்கான ஏற்பாடுகளையும் செய்வதற்கு முன் வந்துள்ளனர்.

யாத்திரிகர்களின் போக்குவரத்து, பாதுகாப்பு வசதிகளைக் கருதி ஆலய உற்சவங்களை நேரகாலத்துக்கு நடத்த முடிவெடுக்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஆலய உற்சவ தினங்களில் வெளியூர்களில் இருந்து வரும் யாத்திரிகர்களின் வசதிகளைக் கருத்திற் கொண்டு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளைப்பற்றி ஆராய்வதற்கான ஆலோசனைக் கூட்டமொன்றும் ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. (க)

0 0 0

## கனகாம்பிகைக் குளம் க. பாடசாலை

ஐயா,

கனகாம்பிகைக்குளம்கனிஷ்ட வித்தியாலயம் எப்பொழும் தடங்கலின்றி தொடர்ந்து நடைபெற்று வருகிறது, 2-7-86ந் திகதி "ஈழநாடு" பத்திரிகையில் கிளி/கனகாம்பிகைக்குளம் கனிஷ்ட வித்தியாலயம் மூடப்படடு விட்டதென்றும் 23-7-86ந் திகதிப் பத்திரிகையில் பாடசாலையில் பிள்ளைகள் குறைவென்றும் பிரசுரமாகியது.

எமது பாடசாலை மாணவர்களுடன் மூடப்பட்ட பாடசாலைகளிலிருந்து முந்நூறுக்கு மேற்பட்ட மாணவர்கள் வந்து கல்வி கற்கின்றனர். முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த முறுகண்டிப் பாடசாலை மாணவர் கூட எமது பாடசாலைக்கு வருகின்ற இவ்வேளையில் இடவசதி ஆசிரியர் பற்றுக்குறை தளபாடம் பற்றுக் குறையின் மத்தியிலும் பாடசாலை நடத்தி வருகின்றோம்.

பொன். தில்லைநாயகம்
அதிபர்
கனகாம்பிகைக்குளம்,
க. வித்தியாலயம்.

சின்னத்துரை கனகரத்தினம்
ஜே. பி. யூ. எம்.

உதவியாளர்
கனகரத்தினம் கேசவன்
-ஜே. பி. யூ. எம்.

சட்டத்தரணிகளும்
பிரசித்த நொத்தாரிசுகளும்

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய
### அறிவித்தல்

(இல. 84 அ-பிரிவுகள்
-524, 532)

யாழ்ப்பாணம் மாவட்ட
நீதிமன்றம்

காலஞ்சென்ற தில்லையம்பலம் கார்த்திகேசு கைம்பெண் சிவபாக்கியம், திருநெல்வேலி. யாழ்ப்பாணம் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்.

-மரணமெய்தியவர்.

கார்த்திகேசு நல்லையா கைம்பெண் நாகரத்தினம், கேணியடி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

-மனுதார்.

மரணசாதன
நியாயாதிக்கம் இல-3973/ரீ

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுளளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986-ம் ஆண்டு ஆவணி மாதம் 08-ந் நாளன்று காலை 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றூர்.

நீதிமன்றக் கட்டளைப்படி

கு. குலசிங்கம்
பதிவாளர்.

என்னுல் வரையப்பட்டது.

க. கேசவன்
ஒப்பம்

மனுதாரின் சட்டத்தரணி

1986-ம் ஆண்டு ஆடி மாதம் 18-ந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. A 970


லிடோ
காலை 10-30, 2-30, 6-30
பாக்கியராஜ்-சரிதா
நடித்த
மௌனகீதங்கள்
(கலர் - புதிய பிரதி)
எமது அடுத்த
வெளியீடு
புதுமைப் பெண்
[புதிய பிரதி]

வெலிங்டன்
வெண்திரையில்
எமது அடுத்த வெளியீடு
10-30, 2-30, 6-30
இனிய பாடல்கள் அதி
பயங்கர சண்டைகள்,
தந்திர காட்சிகள்,
நகைச்சுவை நிறைந்த
சிவாஜி, ஜமுனா
வீரப்பா, நம்பியார்
தங்கமலை ரகசியம்
[புத்தம் புதிய பிரதி]
இந்தியாவிலிருந்து
தருவிக்கப்பட்டது.


# இனப்பிரச்னைக்கு விரைவில் தீர்வு:சிவ்சங்கர் நம்பிக்கை

சென்னை, ஜூலை 27

இந்திய வெளியுறவு அமைச்சர் திரு சிவ்சங்கர் தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். ஜி. ராமச்சந்திரனை நேற்று அவரது இல்லத்தில் சந்தித்து இலங்கைப் பிரச்னை குறித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

இலங்கை இனப் பிரச்னைக்கு விரைவில் தீர்வொன்று ஏற்படும் என்று தான் நம்புவதாக எம் ஜி. ஆரைச் சந்தித்தபின் செய்தியாளர்களிடம் பேசுகையில் திரு. சிவ்சங்கர் தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களை இந்த மாத இறுதியில் தான் டில்லியில் சந்தித்து இனப்பிரச்னை தொடர்பாக பேசப்போவதாகவும் திரு. சிவ்சங்கர் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்கஇலங்கையரசின் சமரச முயற்சிகள் சம்பந்தமாக தொடர்ந்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாட தமிழர் விடுதலைக்கூட்டணி 'பொலிட்பீரோ' நேற்றுச் சென்னையில் கூடியது.

இலங்கை ஜனதிபதியுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் குறித்து கொழும்பு சென்றிருந்த பிரதிநிதிகள் பொலிட்பீரோ உறுப்பினர்களுக்கு விளக்கிக் கூறினர்கள். [ஒ]

### விடுமுறைக்கு வீடு வர
# திருமலையிலுள்ள யாழ் ஆசிரியர்களுக்கு கப்பல்வசதி

திருகோணமலை திங்கள்

திருமலையில் கடமையாற்றும் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் எதிர்வரும் 2ம் தவணை விடுமுறைக்கு யாழ்ப்பாணம் வருவதற்கு கப்பல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

திருமலை அரசாங்க அதிபரும், கல்விப் பணிப்பாளரும் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்

அண்மைக்காலங்களில் வடபகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்தே கடல்மார்க்கமாக தமது சொந்த இடங்களுக்கு ஆசிரியர்கள் செல்ல கப்பல் வசதி செய்யப்படுகிறது [மா]

## பொலனறுவை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

''கடந்த 18-ம் திகதி பொலனறுவை மாவட்டத்தில் உள்ள பள்ளித்திடல் எனும் தமிழ்க் கிராமத்தில் மக்களைக் கொன்றொழிக்கும் நோக்குடன் அக்கிராமத்தைச் சுற்றிவளைத்த ஊர்காவல்படையினரை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணியின் இராணுவப் பிரிவாகிய மக்கள் விடுதலைப்படையினர் எதிர்கொண்டு தாக்கியதில் பதினெரு ஊர்காவல் படையினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். ஏனையோர் தப்பியோடிவிட்டனர்.

கடந்த 19-ம் திகதி பொலனறுவை மாவட்டத்தில் இருந்து சுமார் 30 கிலோ மீட்டருககும் அப்பால் உள்ள கிராமத்தில் ஊர்காவல்படையினருக்கும் மக்கள் விடுதலைப்படையினருக்கும் இடையே இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் 25 ஊர்காவல்படையினர் சொல்லப்பட்டனர். இச்சம்பவங்களின்போது ஊர்காவல்படையிடமிருந்து பல துப்பாக்கிகளும், தோட்டாக்களும் மக்கள் விடுதலைப் படையினரால் கைப்பற்றப்பட்டன.'' [மா]

## மருந்துத் தட்டுப்பாடு

சாவகச்சேரி, ஞாயிறு

சாவகச்சேரி மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் மருந்துத்தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரியவந்துள்ளது

இதன் காரணமாக அங்கு செல்கின்ற நோயாளர் தமது மருந்து வகைகளை வெளியிலேயே வாங்கவேண்டியுள்ளதாம் [ஊ-இ]

### செட்டிகுளம், திருமலை
# அகதிகளின் நிவாரண உதவி நிறுத்தம்

யாழ்ப்பாணம், திங்கள்

செட்டிகுளம், திருகோணமலை ஆகிய பகுதிகளிலிருந்து முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்கு அகதிகளாக வந்துள்ள மக்களுக்கான நிவாரண உதவிகளை அரசு தடைசெய்துள்ளது.

இந்த நிவாரண உதவிகளை பெற்றுக்கொடுப்பதற்காக புனர்வாழ்வு அமைச்சுடனும் புனர்வாழ்வுக்கான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஸ்தாபனங்களுடனும் தாம் தொடர்பு கொள்ள இருப்பதாக பிரஜைகள் இணைப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர் [ச-ஊ]

சி, கனகரத்தினம்-
ஜே. பி. யூ. எம்.
உதவயாளர்
கனகரத்தினம் கேசவன்-
ஜே பி. யூ. எம்.
சட்டத்தரணிகளும்
பிரசித்த நொத்தாரிசுகளும்.

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய
### அறிவித்தல்

(இல. 84 அ-பிரிவுகள்
-524, 532)

யாழ்ப்பாணம் மாவட்ட
நீதிமன்றம்

காலஞ் சென்றகந்தையா சிவகிரீடம், இல. 21, செங்குந்தா ஒழுங்கை, நல்லூர் மார்க்கட், யாழுபபாணம் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

-மரணமெய்தியவர்.

பொன்மலர் சிவகிரீடம், இல. 21, செங்குந்தா ஒழுங்கை நல்லூர் மார்க்கட, யாழ்ப்பாணம்.

-மனுதார்.

மரணசாதன
நியாயாதிக்கம் இல. 3978/ரீ

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளைபதியப்பட்டுள்ளதென இததால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள்எவரும் 1986ம் ஆண்டு ஆவணி மாதம் 08ம் திகதியன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன் தோன்றி அவ்வாறு பதியபபட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றூர்.

நீதிமன்றக் கட்டளைப்படி,

கு. குலசிங்கம்
பதிவாளர்.

என்னுல் வரையப்பட்டது.

க. கேசவன்
ஒப்பம்

மனுதாரின் சட்டத்தரணி

1986-ம் ஆண்டு ஆடி மாதம் 01-ந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

A 971

சின்னத்துரை கனகரத்தினம்
-ஜே. பி. யூ. எம்.
உதவியாளர்
கனகரத்தினம் கேசவன்
-ஜே பி. யூ எம்.
சட்டத்தரணிகளும்
பிரசித்த நொத்தாரிசுகளும்

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய
### அறிவித்தல்

(இல. 84-அ-பிரிவுகள்
-524-532)

யாழ்ப்பாண மாவட்ட
நீதிமன்றம்

முத்துலிங்கம் மகள் அநுராதா, கோப்பாய் வடக்கு, கோப்பாய் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்.

-மரணமெய்தியவர்

காத்தமுத்து மகள் சரோஜினி, கோப்பாய் வடக்கு கோப்பாய்.

-மனுதார்.

மரணசாதன
நியாயாதிக்கம் இல. 3949/ரீ

மேலே உள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுளளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ம் ஆண்டு புரட்டாதி மாதம் 12-ம் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றூர்.

நீதிமன்றக் கட்டளைப்படி

கு. குலசிங்கம்
பதிவாளர்

என்னுல் வரையப்பட்டது

க. கேசவன்

மனுதாரின் சட்டத்தரணி

1986-ம் ஆண்டு ஆடி மாதம் 18ம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

[A-969]

## கொழும்பு---

(1ம் பக்கத்தொடர்ச்சி)

னவை இன்று கொழும்பு புறப்பட்டன.

வவனியா - அநுராதபுரம் வீதியில் கடந்தவாரம் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களையடுத்து இந்த லொறிகள் கொழும்பு செல்லாமல் நொச்சிமோட்டையில் தரித்துநின்றன.

இந்தலொறிகளுக்கானபாதுகாப்பு ஈரற்பெரியகுளம் முதல் மதவாச்சிவரை ராணுவத்தினரால்வழங்கப்படுகிறது லொறிகளை குறிப்பிட்ட எண்ணிக்கை கொண்ட குழுக்களாக ராணுவத்தினர் மதவாச்சிவரை கொண்டுவந்து விடுகின்றனராம். (ஊ)

## மரக்கறி ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு விசாரணைகுட்படுத்தப்பட்டுள்ளார்.

இதுஇல்வாறிருக்கவவனியா சந்தையில் விற்பனைக்குவரும் மரக்கறிவகைகளை வாங்குவதற்கு தென்னிலங்கையிலிருந்து அதிகவியாபாரிகள் படையெடுத்து வருகின்றனராம். வடபகுதியில் உற்பத்தியாகும் மரக்கறிவகைகளுக்கு தென்னிலங்கையில் நல்ல கிராக்கி இருப்பது தெரிந்ததே

## அகால...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரஜைகள் இணைப்புக்குழுத் தலைவர் திரு எஸ். சிவானந்தராசா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

இறந்தவர்களின் இறப்பு பத்திரங்களைப் பெறுவதற்காக உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொள்வதென தீர்மானம் செய்யப்பட்டது. [ச]

## ராஜீவ்...

1ம் பக்கத் தொடர்ச்சி)

பாடு யாதெனில்பிரேரணைகள் மூலம் அதிக உரிமைகள் தமிழ் மக்களுக்கு அளிக்கப்படுகிறதென சிறிமாவோ பண்டாரநாயக்கா போன்றேர் கண்டனம் தெரிவிக்கும் அதேநேரத்தில், தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளைக் குறித்த பிரேரணைகள் நெருங்கவில்லையென போராளிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

மேலும் குறித்த பிரேரணைகள் விடயத்தில் தமிழ் மக்களின் சுயாட்சியைபொறுத்தவரையில் மேலும் பலவற்றைச் சேர்த்துக்கொள்ள தாம் தயாராக இருப்பதாக ஜயவர்த்தனு கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது'' எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலமைப்பரிசில்

யாழ்ப்பாணம், திங்கள்

வடபகுயிலுள்ள தொழிற்சங்கவாதியொருவருக்கு இஸ்ரேலில் புலமைப்பரிசில் வழங்கடபட்டுளளது.

இவர் தமக்குக்கிடைத்த புலமைப்பரிசிலை ஏற்று இஸ்ரேல் செல்வதையிட்டு தமிழ்ப்பாராளிகள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுளளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [கை.ஐ]


ஓராண்டு
நினைவஞ்சலி



திரு.பொன்னம்பலம்
யோகராஜா

மலர்வு: 26-03-1944
உதிர்வு: 29-06-1985

யாழ்நகர் பிறந்து கிளியூர்வாழ்ந்த ஏழூர் சிறக்க வேளான் துறையில் மீளாதுழைத்து வாழ்ந்திருந்தோன். வளமுடன் வாழ நாளா பலமும் நலமே அளித்து மீளாத் துயில் கண்ட அன்பர் - அமரர் பொன்னம்பலம் யோகராசா அவர்கள்.

தாய், மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்.
பேரன்.

சென் பற்றிக்ஸ்பாம்
உருத்திரபுரம்,
கிளிநொச்சி'
28-07-1986.

C 3740

## "போராட்டத்தில்

# மக்கள் பங்கினுல்தான் விடிவு ஏற்படும்"

மாவிட்டபுரம், ஞாயிறு

''மக்களின் ஒருமித்த எழுச்சிமிக்க போராட்டத்தினுல் தான் சாதனைகளை ஏற்படுத்த முடியும். ஆகவே இன்றைய போராட்டம் மக்கள் போராட்டமாக மாறி மக்கள் இதில் நேரடியாகப் பங்குகொண்டால்தான் எமக்கு விடிவேற்படும்''

இவ்வாறு தெல்லிப்பழையில் கடந்த 25ம் திகதி நடந்த எதிர்ப்புத்தின கூட்டத்திற்கு தலைமைதாங்கிப் பேசியஉழைக்கும் மக்கள் ஜனநாயக முன்னணிப் பிரதிநிதி திரு,எஸ் சிவஞானம் கூறினுர்.

எதிர்ப்புத்தினத்தையொட்டி தொழிற் சங்கங்களும், வெகுஜன அமைப்புக்களும் இணைந்து இக்கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

பெருந்தொகையான தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் தொழிற்சங்கப்பிரதிநிதிகளும், வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகளும கலந்துகொண்டு உரையாற்றினர். [இ-எ]

## மௌன அஞ்சலி

யாழ்ப்பாணம், திங்கள்

வதிரி மெதடிஸ்தமிஸன் பாடசாலை அநீதி ஒழிப்பு ஒன்றியத்தின் நிர்வாக சபைக் கூட்டம் நடைபெற்றது

83 ஜுலைமாதம் இடம்பெற்ற வெலிக்கடைக் கொலைகளையும, தொடர்ந்து நடத்தப்பட்டுவரும் இனபடுகொலையையும்வன்மையாகக் கண்டிக்கும் எதர்ப்புத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. பலியாகிய அனைத்துமக்களையும் தியாகிசளையும் நினைத்து சபையினரால் உணர்வு பூர்வமான ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. (இ)

## ஆயரின்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

அச் சடங்கை ஆயர் அவர்களே தலைமையேற்று நடத்தினுர்கள். இது இதயத்தைப் பிளக்கக்கூடிய ஒரு நிகழ் . கல் போலுங் கடினமான இதயங் கூட இச் சம்பவம் கசியச் செய்து விடும். ஆயுதப்படைகளின் அருவருக்கத்தக்க தொடர் நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று இந் நிகழ்வே பரிசளிப்பு விழாவில் ஆயர் அவர்கள் அவ்விதம் பேசக் கூடிய சூழ் நிலையை உருவாக்கியது விழாவில் மறைமுகமாகவேனும் வன்முறையைத் தூண்டிய விதத்தில் அவர் ஒரு வார்த்தைதானும் உச்சரிக்கவில்லை

சிங்களவர், தமிழர் முஸ்லிம் யாராக இருந்தாலும் அவர்கள் படுகொலை செய்யப்படுவதையிட்டு நாம் வேதனையடைகிருேம். அழிவைத்தரக்கூடிய வன்முறைச் செயலுககான காரணத்தை வேறு எங்கோதான் காணவேண்டும்

இரண்டாம் வத்திக்கான் அமர்வில் குறிப்பிட்டுள்ளபடி, தமிழர்களின் சௌரவத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஓர் அமைதியான தீர்வையே ஆயர் அவர்கள் எப்போதும் வலியுறுத்தி வருகின்ருர்.

இறுதியாக எங்கள் மனக் காயத்தைக் குணமாக்கி எல்லோரையும் ஒன்ருக இணைக்க இறைவனை நாம் இறைஞ்சுகின்ருேம.

ஆயர் அவர்களின் கருத்தைக் குறிப்பிட்டுரைக்கும் வகையில் 'றுட்யாட் கிப்பிளிங்,குன் பொருத்தமான சொற்களை இங்கே எதிரொலித்து இவ்வறிக்கையை முடித்து கொ கிருேம.

''நீ பேசிய உண்மையை முட்டாள்களை பொறியில் சிக்க வைக்கும் நோக்கோடு தீயவர்கள் திரிபுபடுத்தியதை நீ கேட்டு தாங்க முடியுமானுல் நீரு ஒரு மா மனிதன், என் மகனும் ஆவா''

ஆசிரியர் கழகம்
புனித பத்திரிசியார் கல்லூரி
யாழ்ப்பாணம்.

## மண்டைதீவு மீன்தூள் ஆலை

# காவலர் இருவர் கடத்தப்பட்டனர்?

யாழ்ப்பாணம், திங்கள்

மண்டைதீவு மீன் தூள் ஆலையில் காவலாளிகளாக கடமையாற்றிய இருவர் மர்மமான முறையில் காணமற் போய்விட்டார்கள் என புகார் தெரிவிக்கப்படுகின்றது.

மண்டைதீவைச் சேர்ந்த திரு இராமலிங்கம் வயது (59) திரு லட்சுமிகுமார் ஆகிய இருவரும் கடந்த புதன்கிழமை மாலை ஆறுமணிக்கு கடமைக்கு சென்ருர்கள் என்றும் மறுநாள் காலை 9 மணியாகியும் இவர்கள் வீடு திரும்பாததை அறிந்த குடும்பத்தினர் அவர்களைத்தேடி மீன் தூள் ஆலைக்கு சென்று பார்த்தபோது அங்கு இருவரையும் காணவில்லையென்றும் கூறப்படுகின்றது.

இவர்களது இரவு சாப்பாடு உடுப்புக்கள் அங்கேயே இருக்க காணப்பட்டதாம். திரு. லட்சுமிகுமாரின் அடையாள அட்டை அங்கு தரையில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மண்டைதீவு மினி இராணுவ முகாமுக்கும் இம் மீன் தூள் ஆலைக்கும் சுமார் ஒரு மைல் இடைவெளிதான் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இது தொடர்பாக மண்டைதீவு பிரஜைகள் குழு யாழ் அரசாங்க அதிபருக்கு நேற்று கடிதமூலம் புகார் செய்துள்ளது. [அ]

## பொன்னுங்காணி அபரிமித விளைச்சல்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்.மாவட்டத்தில் பொன்னுங்காணிச் செய்கை அபரிமிதமான விளைச்சலைக் கொடுத்து வருகின்றது இச்செய்கையில் விவசாயிகள் கடும் ஆர்வம் காட்டிவருவதைத் தொடர்ந்து, சந்தைகளில் பெரும் கிராக்கி இருந்துவருகின்றது

ஒரு காலத்தில் பொன்னுங்காணி கொழும்பில் இருந்து விற்பனைக்கு வந்தது குறிப்பிடத்தக்கது. [கை]

## உறவினரை எதிர்பார்க்கின்றனர்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ் ஆஸ்பத்திரியில் இம் மாதம் 5 ம் தேதி அனுமதிக்கப்பட்ட சாவகச்சேரி, சங்கத்தானையை சேர்ந்த எஸ். வேலுப்பிள்ளை (47 வயது) நேற்று முன்தினம் மரணமானுர்.

மரண விசாரணைக்கான ஏற்பாட்டை செய்ய ஆஸ்பத்திரி பொலிஸார் உறவினரின் வரவைஎதிர்பார்க்கின்றனர்.

## க. பொ. த. உயர்தர பரீட்சை செய்திகள்

### நாவலர் வித்தியாலயத்தில் பரீட்சைமண்டபம்

யாழ்ப்பாணம், திங்கள்

இடம்பெயர்ந்து வந்து யாழ்ப்பாணத்தில் இருந்து க பொ. த. உயர்தரப பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கு யாழ்ப்பாணம்நாவலர் வித்தியாலயத்தில் பரீட்சை மண்டபம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்று யாழ். கல்விப்பணிப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தெரிவிக்கிருர்.

இடம் பெயர்ந்து வந்துள்ள மாணவர்கள் பரீட்சைப் பெறுபேறுகளை விரைவில் பெறுவதற்கு அவர்கள் தமது அடையாள அட்டையையும், முந்திய அனுமதி அட்டைகளையும் யாழ கல்வித்திணைக்களத்தில் சமர்ப்பிக்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. [ச]

### விடைத்தாள் மெழுகுமுத்திரை

யாழ்ப்பாணம், திங்கள்

க. பொ த. உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களுக்கு மெழுகு முத்திரை இடுவது பரீட்சை மண்டப மேற்பார்வையாளர்களாலே இம்முறை மேற்கொள்ளப்படும்

மேற்பார்வையாளர்கள் தமது சொந்த முத்திரையையே விடைத்தாள் பைக் கற்றுகளுக்கு இடுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இத்துடன் விடைத்தாள் பைக்கற்றுகளை பொதிசெய்து கட்டும்போது பரீட்சை மண்டப விசேட நோக்குநர்,மேற்பார்வையாளர்கள் ஒருமித்துச் செய்வார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [ச-ஐ]

### பரீட்சை அறிவுறுத்தல் வகுப்புகள்

யாழ்ப்பாணம், திங்கள்

க. பொ த. உயர்தரப் பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு பரீட்சை சம்பந்தப்பட்ட அறிவுறுத்தல்களை வழங்குவதற்காக கொழும்பு பரீட்சைத் திணைக்களத்திலிருந்து வரவிருந்த உத்தியோகத்தர் வராததினுல் அவ் வறிவித்தல் சம்பந்தப்பட்ட வகுப்புகள் இம்மாதம் 30ம் திகதி காலை 9 மணிக்கு யாழ் இந்துக்கல் லூரியில் நடைபெறும் எனத்தெரிவிக்கப்படுகிறது (ச

### விசேட பரீட்சை நோக்குநர்கள்

யாழ்ப்பாணம், திங்கள்

க. பொ. த. உயர்தரப் பரீட்சையின்போது ஒவ்வோர் பரீட்சை மண்டபத்திலும் பரீட்சை ஒழுங்குகளைக்கவனிப்பதற்காக ''விசேட நோக்குநர்களை 'கல்வி அமைச்சு இம்முறை அனுப்பவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

பரீட்சை நடைபெறும் மண்டபங்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து உறுப்பினர் கொண்ட விழிப்புக்குழுக்கள் கண்காணிப்புச் செய்யவுள்ளதாகவும் தெரிகிறது.

இக்குழுக்களில் காலையில் ஐந்து பேரும், மாலையில் ஐந்து பேரும் கடமைபுரிவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. [ச-ஐ]

## 'இராணுவ பாஸ்' பெற்ற

# மயிலிட்டி விவசாயிகள் தொடர்ந்து பாதிப்பு

மாவிட்டபுரம், ஞாயிறு

மயிலிட்டி வடக்கில் மீண்டும்குடியேறி விவசாயம்செய்ய இராணுவத்தினரால் ''பாஸ்'' வழங்கப்பட்ட சுமார் 125 குடும்பங்கள் இராணுவத்தினரின் நடமாட்டமும், பீதிநிறைந்த சூழ்நிலையும் அப்பகுதியில் நீடிப்பதால் தமது முயற்சியைக் கைவிட்டு தொடர்ந்தும் கஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர்.

மயிலிட்டி வடக்குப்பகுதியில் இருந்து கடந்த பல மாதங்களுக்குமுன் பீதியால் வெளியேறியகுடும்பங்கள் விவசாயம் செய்ய முடியாமலும், குடியிருக்க முடியாமலும் பெரிதும் கஷ்டமுற்றுவந்தனர்.

இக்குடும்பங்கள் பிரஜைகள் குழுக்கள் மூலம் வடபகுதி இராணுவ இணைப்பதிகாரியை சந்தித்து தமது கஷ்டநிலைமையை எடுத்துக்கூறியதை யடுத்து சுமார் 125 குடும்பங்களுக்கு அப்பகுதியில் மீண்டும் குடியேறி விவசாயம் செய்ய அண்மையில் இணைப்பதிகாரி ''பாஸ்'' வழங்கினுர்.

இந்த ''பாஸ்'' உதவியுடன் அப்பகுதிக்குச்சென்ற மேற்படி குடும்பங்கள் அங்கு அமைதியான சூழ்நிலையில் தாம் குடியேறி விவசாயம்செய்யமுடியாதிருப்பதைஅவதானித்து தமது முயற்சியை கைவிட்டுள்ளன.

அப்பகுதியில் இராணுவ நடமாட்டம் இருப்புடன் ஹெலிகாப்டர் ரோந்தும், பயங்கர சூழ்நிலையும் நீடிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் அப்பகுதிக்குச் சென்ற விவசயிகள் சிலர் நேற்று (26-07-86) தாக்கப்பட்டதாகவும்,மேலும் பலவீடுகள் குண்டுகள் வைத்து தகர்க்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பலாலி, மயிலிட்டிப் பகுதியில் நேற்று முழுவதும் பாரிய குண்டுச் சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன.

## மாவை கந்தன் உற்சவம்

# அமைதியான சூழலில் நடைபெற்று வருகிறது

மாவிட்டபுரம், ஞாயிறு

அமைதியான சூழலில் சிறப்பாக இடம் பெற்றுவரும் மாவைக்கந்தன் ஆலய வருடாந்த உற்சவத்தில் பெருந்தொகையான பக்தர்கள் கலந்து கொள்கிருர்கள்.

கடந்த 12 ம் திகதி கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமான மேற்படி ஆலய உற்சவம் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது.

மக்கள் அச்சமின்றி ஆலய வழிபாட்டுக்கு வந்து போக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமையாலும், தற்சமயம் அமைதியான சூழ்நிலை நிலவுவதலும் பலவேறு பகுதிகளிலிருந்தும் திரளான பக்தர்கள் இங்கு வந்து தரிசனம் செய்கிருர்கள்.

ஆலய வீதிகளில் சடைகள் அமைக்கப்பட்டு ஆலய சுற்ருடல் பொலிவு பெற்றுத் திகழ்கிறது.

தெல்லிப்பழை பாதுகாப்பு சேவைதொண்டர்கள், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர், சாரணர்கள், ஆலய தொண்டர்கள் ஆகியோர் பக்தர்களின் பாதுகாப்பு, போக்குவரத்து வசதிகளை கவனித்து வருகின்றனர்.

உள்ளூர் பொருட்களின் பாவனையை வலியுறுத்தும் விதத்தில் உள்ளூர் பொருட்களைக் கொண்ட விற்பனை நிலையம்ஒன்று ஆலய வீதியில் அமைக்கப்பட்டுள்ளது. (க)

## புதிய திட்டம்பற்றி

# போராளிகளுடன் மீண்டும் 'விஜய' பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள்

இலங்கை அாசினல் அரசியல் கட்சிமகாநாட்டில் முன்வைக்கப்பட்ட திட்டங்களை முன்வைத்து தமிழீழ போராளிகள் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இலங்கை மக்கள்கட்சி குழுவினர் இவ்வார இறுதியில் மீண்டும் சென்னை செல்கிருர்கள்.

இக்குழுவில் கட்சிச் செயலாளர் திரு விஜயகுமாரணதுங்காவுடன் கட்சியின் உப தலைவர் திரு ஒசிஸ் அபயகுணசேகராவும, திருமதி சந்திரிகா குமாரணதுங்காவும் செல்கிருர்கள்.

இவ் விஜயத்தின் போது இலங்கை அரசு முன்வைக்கும் ஏனைய புதிய திட்டங்களையும் தான் போராளிகள் தலைவர்கள் முன் முன்வைக்கவுள்ளதாகவும் திரு குமாரணதுங்க தெரிவித்தார். (சி-இ)

உலகச் செய்திகள்

### தென்னுபிரிக்க பூசல்——————

# 'காமன்வெல்த்'திலிருந்துவிலகுவதாக

# ஸாம்பியா எச்சரிக்கை!

லுசாக்கா, ஜூலை-27

**அடுத்த மாதம் லண்டனில் நடைபெறவுள்ள 'மினி காமன்வெல்த் மாநாட்டில்' தென்னுபிரிக்க இனப் பாகுபாட்டுக் கொள்கைக்கு முடிவு காணும் நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படாவிட்டால் 'காமன்வெல்த்'திலிருந்து தான் விலகப்போவதாக ஸாம்பியா எச்சரித்துள்ளது.**

தமது அரசியல் வாழ்க்கையில் தாம் மேற்கொள்ளவிருக்கும் மிகக் கடுமையான முடிவாக இது அமையும் என்று ஸாம்பியா அதிபர் டாக்டர் கெனத் கௌண்டா தெரிவித்துள்ளார்.

ஸாம்பியாவின் நண்பர்களது கருத்துக்களைக் கவனமாகப் பரிசீலிக்கும் சிறந்த நாடுகளுடன் தாம் லண்டன் செல்ல விருப்பதாகவும் அவர் கூறினுர்.

**'ஹவ்' பேச்சுக்கு கண்டனம்**

இது இவ்வாறிருக்க பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் திரு ஜேப்ரி ஹவ் தென்னுபிரிக்க அரசுடன் நடத்திய சமாதானப் பேச்சுவார்த்தைகளை திரு கௌண்டா கண்டித்துள்ளார்.

**'ஜேப்ரி' கருத்து**

இதேவேளை தென்னுபிரிக்காவிற்கான சமாதானத் தூது பற்றித் தான் நம்பிக்கையிழந்திருப்பதை திரு. ஜேப்ரி ஹவ் மறைமுகமாக ஒத்துக்கொண்டுள்ளார்.

தனது முயற்சி தோல்வியடையும்பட்சத்தில் மற்றுமொருவர் இந்தச் சமாதான முயற்சியைத் தொடரவேண்டியிருக்கும் என்றும் திரு. ஜேப்ரி தெரிவித்துள்ளார்.

சிறைவைக்கப்பட்டுள்ள கறுப்பினத் தலைவர் திரு நெல்சன் மண்டேலாவை விடுதலை செய்தல், எதிர்க் கட்சிகளுக்கு எதிரான தடையை நீக்குதல் போன்ற இவரது இரு கோரிக்கைகளுக்குத் தென்னுபிரிக்க அரசாங்கம் இதுவரை இணங்கவில்லை.

திரு. ஜேப்ரி ஹவ் பன்னிரண்டு ஐரோப்பிய நாடுகளின் சார்பில் தென்னுபிரிக்க வெள்ளையின சிறுபான்மை அரசாங்கத்திற்கும் பெரும்பான்மைக் கறுப்பின மக்களுக்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சியாக இந்த விஜயத்தைமேற்கொண்டது தெரிந்ததே. [ஒ]

---

லெபனுனிலுள்ள

## மொரோக்கோ தூதரகம் சேதமாக்கப்பட்டது

பெய்ரூட் ஜூலை-27

லெபனுன் தலைநகரான பெய்ரூட்டிலுள்ள மொரோக்கோ தூதரகத்தில் புகுந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் தூதரக அலுவலகத்தைச் சின்னுபின்னப்படுத்தியுள்ளனர்.

மொரோக்கோ நாட்டின் மன்னர் ஹஸன் அவர்களுக்கும் இஸ்ரேலியப் பிரதமர் பெரஸ் அவர்களுக்குமிடையே இந்த வாரம் நடந்த பேச்சுவார்த்தைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்முகமாக சுமார் இரண்டாயிரம் பேர் இந்நடவடிக்கையில் இறங்கினுர்கள்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலர் தூதரகத்திற்குள் புகுந்து அங்கு வைக்கப்பட்டிருந்த மொரோக்கோ மன்னர் ஹஸனின் உருவப்படத்தை உடைத்தெறிந்ததுடன் மொரோக்கோ நாட்டின தேசியக் கொடியையும் கிழித்தெறிந்து அதற்குப் பதிலாக ஈரானிய சார்புடைய ஷியா முஸ்லீம் குழுவொன்றின் கொடியை ஏற்றியதாகக் கூறப்படுகிறது (ஒ)

---

பாகிஸ்தானில்

## மூன்றுகட்சிகள் இணைந்த அவாமி தேசியக்கட்சி

இஸ்லாமாபாத் ஜூலை: 27

பாகிஸ்தானில் மூன்று அரசியல் கட்சிகள் இணைந்து 'அவாமி தேசிய கட்சி'யை அமைத்துள்ளன.

புதிய குழுவின் பிரதிநிதியொருவர் நேற்று கராச்சியில் இதனைத் தெரிவித்தார்

தேசிய ஜனநாயகக்கட்சி, அவாமி பெறிக், மஸ்தூர் ஹிஷான் கட்சி ஆகிய கட்சிகளே இணைந்து 'அவாமி தேசிய கட்சி'யை அமைத்தவையாகும்.

பாகிஸ்தானில் ஜனநாயக மீட்பு இயக்கத்தைச் சேர்ந்த பதினெரு கட்சிகளில் இந்த மூன்று கட்சிகளும் அடங்கும். (ஒ)

---

## கூர்க்காபிரிவினைவாதிகள் போர்க்கோலம்?

புதுடில்லி, ஜூலை-27

இந்தியாவின் வட கிழக்குப் பகுதியிலுள்ள கூர்க்காப் பிரிவினைவாதிகள் இந்தியாவும் நேபாளமும் செய்துகொண்ட ஒப்பந்த நகல்களை எரித்துவிடுவதற்குத் திட்டமிட்டுவருவதையடுத்து அங்கு இந்தியப் 'பாரா' துருப்பினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கூர்க்கா தேசிய விடுதலை முன்னணி தனி நாடு கோரிப் போராட்டம் நடத்திவருவது குறிப்பிடத்தக்கது.

இப்பகுதியில் பொலிஸ் துப்பாக்கிச் சூட்டின்போது ஆறு கூர்க்கா இனத்தவர்கள் கொல்லப்பட்டதையடுத்து அரசாங்கம் இரண்டு மாத காலத்திற்கு பொது இடங்களில் நான்கு பேருக்கு மேல் கூடக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்துள்ளது

இதேவேளை புதுடில்லியின் சுற்றுப்புறங்களில் இந்துக்களுக்கும் சீக்கியர்களுக்குமிடையில் இடம்பெற்றுவரும் மோதல்களில் நான்கு பேர் கொல்லப்பட்டிருப்பதாகவும், ஐம்பது பேர் காயமடைந்திருப்பதாகவும், பல கட்டிடங்கள், வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. [ஒ]

---

சுவீடன் வங்கியில்

## மார்க்கோஸ், மனைவி பெயரில் 'போலிக்'கணக்கு!

மணிலா, ஜூலை-27

பிலிப்பைன்ஸ் முன்னுள் ஜனுதிபதி பேர்டினன்ட் மார்க்கோஸ் அவரது மனைவி இமெல்டா ஆகியோர் வேறு பெயர்களில் 23 கோடி டாலர்களை சுவிஸ் வங்கியில் வைப்புச் செய்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இவ்விருவருக்கும் கிடைத்த அரசாங்கச் சம்பளத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது இவர்கள் இத்தகையபணத்தை எவ்வாறு சம்பாதித்தார்கள் என்பது சந்தேகத்திற்குரியதாகவுள்ளது.

திருமதி மார்க்கோஸ் மனித குடியேற்றத் திட்ட அமைச்சராகவும், மணிலா மாநிலத்தின் ஆளுநராகவும்இருந்தவர்.

மார்க்கோஸின் உதவியாளர்களிடமிருந்து இதுவரை ஒரு கோடி டாலர்களை ரொக்கப் பணமாகவும், 50 கோடி டாலர்களை உடைமைகளாகவும் பிலிப்பைன்ஸின் புதிய அரசாங்கம் கைப்பற்றியுள்ளது [ஒ]

---

## தொழிலாளருக்கு இருப்பிடம் சொந்தமாகும்

மதுரை, ஜூலை-27

இலங்கையிலுள்ள தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களுக்கு அவர்கள் வசிக்கும்வீடுகள அவர்களுக்கு உரிமையாக்கப்படவிருக்கிறதுஎன்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் துணைப் பொதுமேலாளர் திரு ராஜு மதுரையில் தெரிவித்துள்ளார்.

இதற்காகக் கமிட்டியொன்று அமைக்கப்பட்டுள்ளது இந்தப் பணி பதினெட்டு மாதங்களுக்குள் நிறைவுபெறுமென்றும் அவர் கூறினுர். [ஒ]

---


## 65 வருடகாலமாக

மக்கள் மனதில் நிலைத்த பெயர்

## தோலகட்டி தயாரிப்புகள்

இவ்விளவேனிற் காலத்தில் தோலகட்டி தயாரிப்புகள் நிச்சயம் உங்கள் தாகத்தை பூர்த்திசெய்யும்.
தோலகட்டி தயாரிப்புகள் தங்குதடையின்றி எங்கும் கிடைக்கும்.

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற

**வரணிமிசன் விற்பனை நிலையம்,**
**145, நவீன சந்தை,**
**யாழ்நகர்.**

யாழ்நகரில் பின்வரும் இடங்களிலும் தோலகட்டி தயாரிப்புகளை பெற்றுக்கொள்ளலாம்.

* ரட்ணம் பார்மசி and குரோசரி
* மாகோ ஸ்டோர்ஸ்
* R G. ஸ்டோர்ஸ்
* ஸ்ரீ ராமகிருஷ்ணுஸ்
* ஸ்ரீ சாயி ஸ்டோர்ஸ்
* சிட்டி மெடிக்கல்ஸ்
* S. K. M. மெடிக்கல்ஸ்
* பொம்பே ஜாயி சுவீட்ஸ்
* ஸ்ரீரஞ்சனி ஸ்டோர்ஸ்
* யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம்
* கற்பகம்
* விற்பனை இலாகா (மக்கள் கடை)
* சங்கரப்பிள்ளை அன்ட் பிரதர்ஸ்
* சண்முகநாதன் அன்ட் கோ
* கந்தையாப்பிள்ளை and சன்ஸ்
* ராஜா கோப்பிரேஷன்
* குணரட்ணம் ஸ்டோர்ஸ்
* யோகு டிரேடிங்
* நாகதர்ஜினி
* சுப்பிரமணியம் அன்ட் கோ
* உமா ஸ்ரோர்ஸ்
* ராஜி ஸ்டோர்ஸ்
* அருணுசலம்பிள்ளை அன்ட் கோ
* சுப்பையா அன்ட் கோ (மதுபான விற்பனைச்சாலை)
* முகமதலி அப்பதலலி
* டவர் கோப்பி அன் கூல் பார்
* யாழ். டிரேடிங்
* அனிதா (கச்சேரியடி)
* கண்ணன் ஸ்டோர்ஸ்
* பெமலி காடின்ஸ் [சின்னக்கடை]
* சத்தியா ஸ்டோர்ஸ் ,,
* சிவசக்தி ஸ்டோர்ஸ் ,,
* கமலா ஸ்டோர்ஸ்
* பெமலி சொப் [நாவலர் வீதி]
* மாணிக்கம் ஸ்ரோர்ஸ் [சின்னக்கடை]
* ஆர். வி. ஜி. மெடிக்கல்

தொடரும்

★ எமது நெல்லிரச லேபலில் ஒரு மணிக்கூட்டு கோபுரம் உண்டு அதில் மணி 6-20 தைக் காட்டுகின்றது. உன்னிப்பாகக் கவனித்து வாங்கவும்.

**விபரங்களுக்கு:**

ஜோ. எகட்டன், சௌனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ், யாழ்நகர்.

செபமாலை தாசர் சபை, தோலகட்டி, வசாவிளான்.

ஆதரவிற்கு நன்றி! [A 961]



## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ ஜேர்மனி
★ பிரான்ஸ் ★ கனடா

நேரடியான உடனடிப் பிரயாணம்

நாளுக்கு நாள் பயணமாகிக்கொண்டிருக்கிறுர்கள்.
உடனடியாக எமது காரியாலயத்தில் தொடர்புகொள்ளவும்.

**குவைற்**
டிரைவர் [Driver], பணிப்பெண்

**சவுதி அரேபியா**
கிளினேர்ஸ்

உடனடி பிரயாண ஒழுங்கு செய்துகொடுக்கப்படும்.
அத்துடன் பாஸ்போட், பொன்ட், விசா, ரிக்கட்டிங் என்பனவும் குறைந்த செலவில் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

## Group Atlantic Travels

163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[அடைக்கலமாதா கோவிலுக்கு முன்பாக]

**V. M. Balasingam**
HOTEL ORCHID INN,
571/6, GALLE ROAD,
WELLAWATTE, COLOMBO-6.
T. P. 583916

A 1004

## 'கல்வி இலாகா' உதைபந்தாட்டம்:
# சாம்பியன் மோதல்கள் இன்றுமுதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாணக் கல்வி இலாகினால், யாழ் மாவட்டப் பாடசாலைகளிடையே நடைபெற்று வந்த உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டியின் இறுதியாட்டங்கள் இன்று முதல் நடைபெறவுள்ளன

15-வயதுப் பிரிவுப் போட்டியின், சாம்பியன் மோதலில் யாழ். இந்துக் கல்லூரியும், இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரியும் மோதுகின்றன.

இப்போட்டி இன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

17-வயதுப் பிரிவுப் போட்டியின் சாம்பியன் மோதலில், யாழ்ப்பாணம் சென். சாள்ஸ் மகா வித்தியாலயமும், கொக்குவில் இந்துக் கல்லூரியும் மோதுகின்றன.

இப்போட்டி நாளைசெவ்வாய் கிழமை, யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

19-வயதுப் பிரிவுப் போட்டிகளின், அரைஇறுதி ஆட்டமும் இன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். இன்றைய ஆட்டத்தில், யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியும், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும் மோதும்

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்கும், யாழ். இந்துக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற மற்றுமொரு அரை இறுதியாட்டம், குழப்பத்தில் முடிவடைந்ததால் அதன் பெறுபேறுகள் வெளிவந்ததும் மேற்படி இரு போட்டிகளிலும் வெற்றிபெறும் கோஷ்டிகளுக்கிடையில் இறுதியாட்டம நடைபெறவுள்ளது.

இந்த இறுதியாட்டம் கொக்குவில் இந்துக் கல்லூரிமைதானத்தில் நடைபெறும். (வி)

## கருத்தரங்கு

சாவகச்சேரி, ஞாயிறு கைதடியில் ஓர் ஆயுள்வேத மூலிகைத்தோட்டம் அமைப்பதற்கு ஆயுள்வேத வைத்தியர்களினதும் மற்றும் பெரியோர்களது கருத்துக்களையும் ஆதரவையும் திரட்டும் பொருட்டு சர்வதேச சமாதான சேவை இயக்கம் ஆகஸ்ட் மாதம் 16ம் திகதி சனிக்கிழமை கைதடி ஆயுள்வேத வைத்தியசாலை மண்டபத்தில் கருத்தரங்குகளை நடாத்தவுள்ளது.

இக் கருத்தரங்கின்போது எமது பகுதியில் அமைக்கப் படவுள்ள மூலிகைத் தோட்டத்தின் தேவை அவசியம் முக்கியம் பற்றி விரிவாக ஆராயப்படும் என இயக்கத்தின் தலைவர் திரு வீ எஸ். துரைராஜா தெரிவித்துள்ளார். [இ]

## பாடசாலை கிரிக்கெட்
# இன்றும் நாளையும் சாம்பியன் மோதல்

யாழ்ப்பாணம், திங்கள் யாழ் மாவட்டப் பாடசாலைகளிடையே நடைபெற்று வந்த கிரிக்கெட் போட்டிகளில் 17 வயதுப் பிரிவுக் கோஷ்டிகளின் இறுதிபாட்டம் இன்றும் நாளையும் யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். இவ்விறுதியாட்டத்தில் யாழ் இநதுக்கல்லூரியும். சென்ஜோனஸ் கல்லூரியும் மோதுகின்றன.

யாழ் இந்துக்கல்லூரி கோஷ்டிக்கு வீரர் பி பரமானந்தன், தலைமை தாங்குகின்றார். யாழ். இந்துக்கல்லூரி இதுவரை மொததம் ஐந்து போட்டிகளில் கலந்து கொண்டு அனைத்திலும் வெற்றி பெற்று முன்வணியில் நிற்பது குறிப்பிடத் தக்கது,

யாழ்ப்பாணம் சென் ஜோனஸ் கல்லூரிக்கு வீரர் ரவிராஜ் தலைமை தாங்குகின்றார். சென்ஜோன்ஸ் கல்லூரி இதுவரை ஐந்து போட்டிகளில் கலந்துகொண்டு நாலு போட்டிகளில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது இக் கோஷ்டி சென் பற்றிக்ஸ் கோஷ்டியிடம் தோலவியடைந்தது தெரிந்ததே.

இச் சாம்பியன் மோதல் கடந்த வெள்ளியும், சனியும் நடைபெறுமென முன் கூட்டியே தெரிவிக்கப்பட்டிருந் பட்டிருந்தது ஆனல் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஹர்த்தாலை முன்னிட்டே இச் சாம்பியன் மோதல் இன்றும், நாளையும் நடைபெறுமெனத் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது; (வி)

## லண்டன் பயணம்

பண்டத்தரிப்பு, ஞாயிறு பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி ஆங்கில ஆசிரியரும், தேசிய தொழிற்பயிற்சி பயிலுனர் சபையின் ஆங்கில விரிவுரையாளருமான திரு. மு. க, பத்மநாதன் பிரித்தானிய கல்வி மன்றத்தின் புலமைப் பரிசிலைப் பெற்று ஆங்கிலம் கற்பித்தல் சம்பந்தமான விஷேட பயிற்சியைப் பெற கடந்த வாரம் லண்டன் பயணமானார், [இ]

## பாராட்டு

கிளிநெச்சி, ஞாயிறு தபாற்சேவை மிகவும் உன்னதமானது தபாற் சேவகர்கள் புனிதப்பணியை மேற்கொள்பவர்கள். இந்த வகையில் தன்னலம் கருதாத சேவையை நல்கி இளைப்பாறியுள்ள தபால் சேவகர் திரு. சரவணமுத்துவின் சேவை பாராட்டிற்குரியது.

இவ்வாறு கொடிகாமம் தபால்நிலைய தபாற்சேவசராக முப்பது வருடங்கள் கடமையாற்றி இளைப்பாறியுள்ள தபாற் சேவகர் திரு பே. சரவணமுத்துவின் சேவைநலம் பாராட்டு விழாவில் உரையாற்றுகையில் தபால் அதிபர் திரு எஸ். திருச்செல்வம் கூறினர்.

இவ் வைபவத்தில் விடத்தற்பளை தபாலதிபர் எஸ் தமோதரம்பிள்ளை தபால் ஊழியர் வே இரத்தினசிங்கம் திரு. சரவணமுத்து ஆகியோரும் உரையாற்றினர்கள் [இ]

## தென்னபிரிககாவில்
# இருவர் கொலை

ஜொகனேர்ஸ்பேக் ஜூலை: 27 தென்னபிரிக்கா ஜொகனேர்ஸ்பேக்கில் வெள்ளையரல்லாதோர் குடியிருப்புக்கருகே பாதுகாப்புப் படையினர் இரண்டு பேரைக் சுட்டுக் கொன்றுள்ளனர்.

கடந்த மாதம் 12-ம் திகதியன்று அவசரகாலச் சட்டம் அமுல் படுத்தப்பட்ட பின்னர் இதுவரை தென்னபிரிக்காவில் இறந்தோர் தொகை 179 ஆக அதிகரித்துள்ளது. (ஒ)

## தமிழக அமைச்சர் கருத்து

சென்னை யூலை 27 ''இலங்கையில் நடைபெற்று வரும் கொலைச் சம்பவங்கள் நிறுத்தப்பட்டால் அன்றி அரசியல் தீர்வு ஏற்படாது இதற்கு வழிவகைகளைக் காண்பதும் அரிது'' என்று மின்துறை அமைச்சர் திரு ராமச்சந்திரன் சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் இன்று பேசுகையில் கூறினர்.

## மீன் வழிப்பறி

நெல்லியடி, ஞாயிறு கையில் ஐம்பது ரூபா நோட்டைக்காட்டியபடி ரூபா 40 பெறுமதியான மீன் வகைகளை ஒரு மீன்வியாபாரிப் பெண்ணிடம் பெற்ற ஒருவர் மீனுடனும் பணத்துடனும் சைக்கிளில் தப்பயோடிய சம்பவம் நேற்று முன்தினம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை சந்திக்கு அண்மையில் இடம்பெற்றது. மீன் விற்பனைப்பெண் சத்தமிட்ட போதிலும் அந்தப் பேர்வழி தப்பியோடிவிட்டார் [இ]

## மின் இணைப்பு வேலை
# 14 லட்ச ரூபா ஒதுக்கீடு

சாவகச்சேரி, ஞாயிறு தென்மராட்சிப் பகுதியில் கிராமிய மின் இணைப்பு வேலைகளுக்கென 14 லட்சம் ரூபாவை, பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு வே. துரைராஜா ஒதுகீடு செய்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ். மறவன்புலவு, கச்சாய், உசன், மட்டுவில் சிவன் கோவிலடி போன்ற கிராமங்கள் இவ்வாண்டு மின் இணைப்பினைப் பெறவுள்ளன. (க)

## மாணவரிடையே
# "சேவை மனப்பான்மையை வளர்க்கவேண்டும்"

வேலணை, ஞாயிறு ''மாணவர்கள்மத்தியில்சிரமதான பழக்கவழக்கங்களை உருவாக்கி அவர்களை நாட்டின் வளர்ச்சிக்காகவும், மக்களுக்கு சேவை செய்யும் தொண்டுள்ளம் படைத்தவர்களாகவும் உருவாக்க வேண்டிய பாரிய பொறுப்பு பெற்றோரிலும், ஆசிரியர்களிலும் தங்கியுள்ளது''

இவ்வாறு எழுவைதீவு றோமன்கத்தோலிக்க பாடசாலையில் நடைபெற்ற புனித ஞானப்பிரகாசியர் பக்தி கழகத்தின் வருடாந்தக் கூட்டத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றிய மேற்படிகழகத்தின் தலைவர் திரு தொ.யேசுரத்தினம் குறிப்பிட்டார்.

நடப்புவருட நிர்வபகிகளாக பின்வருவோர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்:

தலைவர் திரு. தொ. யேசுரத்தினம் உபதலைவர் திருமதி கென்றிரூெபின்சன் ரயின், செயலாளர் இ கிங்ஸ்லி பெனண்டோ, உபசெயலாளர் ம. யோசவ்ஜெராட், தனாதிகாரி அ தவராசாகணக்காய்வாளர் யோ. அன்ரன்டிமஸ், ஆலோசகர் ப. யேசுரத்தினம், இன்னும் 3 பேர் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். [இ]

## பங்களாதேஷ் ஜனதிபதியின் கவலை

கொழும்பு ஞாயிறு இலங்கையில் சமாதானத்தையும் ஸ்திரநிலையையும்சமீப காலத்தில் சீர்குலைத்த வன்செயல்களும் இனப்போராட்டமும் அளவிடமுடியாத சேதத்தையும் கவலையையும் அளித்துள்ளதாக பங்களாதேஷ் ஜனதிபதி முகமது எர்ஷாத் நேற்றுக்காலை இலங்கை ஜனதிபதி மாளிகையில் தமக்களிக்கப்பட்ட விருந்துபசாரத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்

அவர்மேலும் உரையாற்றுகையில் ''மக்கள் உணர்ச்சி வசப்படும்போது நீதியும் நியாயமும் நாட்டில் ஏற்பட சில காலம் செல்லும் எனினும் இலங்கை மக்கள்தமக்கிடையே உள்ள அபிப்பிராய பேதங்களைத் தாங்களாகவே தீர்த்துக் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளதாக நம்பிக்கை தெரிவித்தார்

இந்நாட்டு மக்களனைவரும் சமாதானத்துடனும் சுபீட்சத்துடனும் வாழ அரசு வழிவகுக்கவேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார். [இ]


கப்பலில் செல்வதற்கு

பிரயாண ஒழுங்குகள்

புதியவர்கள் அனுபவமுள்ளவர்கள்

காப்டன் I காப்டன் II ஆபிசர் II

எஞ்சினியர் I எஞ்சினியர் II எஞ்சினியர் III

எலற்றீசன் றேடியோ ஆபிசர் போசன்

ஆகியோர்க்கு சப்பலில் செல்வதற்கு உடன் பிரயாண ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படும்.

அத்துடன் 15 நாட்களில் பெய்ரூட் செல்வதற்கேற்ற பிரயாண ஒழுங்குகளும் பாஸ்போட், பொண்ட்டும் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகொள்ளும் முகவரி:

நியூ மரியா சிப்பிங் அன் ரவல்

183/3, நியூ லலிதா பில்டிங்,

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[C-3729]



பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ கனடா

செல்ல விரும்புபவர்கள் உடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

அத்துடன்

★ ஜேர்மனி ★ பிரான்ஸ் ★ இத்தாலி

ஆகிய நாடுகளிற்கும் எமது பிரதிநிதி வெகுவிரைவில் அழைத்துச் செல்ல உளளார்.

மற்றும்

பாஸ்போட், விசா, ரிக்கட், பொண்டிங் என்பனவும் வெகுவிரைவில் செய்து கொடுக்கப்படும்.

லிப்ருஸ் லிமிற்ரெட்

R. G. பில்டிங், 70, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

2nd Floor, York Building, 94 1/7, York Street, Colombo - 1. Tele. No. 25508.

[A-1014]



வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

பதவி வெற்றிடம்

இச்சங்கத்தில் கீழ்க்கண்ட பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகன்றன. முடிவுத் திகதி: 11-08 86. (விண்ணப்பப் படிவங்களை சங்க அலுவலகத்தில் ரூபா 1/- வீதம் செலுத்திப் பெற்றுக்கொள்ளவேண்டும்,

| | பதவி | குறியீடு |
|---|---|---|
| 01. | வர்த்தக முகாமையாளர் | 106 |
| 02. | எழுதுவினைஞர் | 302 |
| 03 | களஞ்சியக் காப்பாளர் | 202 |
| 04. | உதவிக் களஞ்சியக் காப்பாளர் | — |
| 05. | கிளைமுகாமையாளர் | 208 |
| 06. | கிராமிய வங்கி முகாமையாளர் | 208 |
| 07. | விற்பனையாளர் | 308 |
| 08. | உலைறிச் சாரதி | — |
| 09. | ட்ராக்டர் சாரதி | — |
| 10. | உலொறிக் கிளீனர் | — |
| 11. | காசாளர் | 306 |
| 12. | காவலாளி | 315 |
| 13. | கூலியாள் | 314 |
| 14. | தட்டெழுத்தாளர் | 305 |
| 15. | காரியாலய சேவகன் | 317 |

பதில் பொதுமுகாமையாளர்,

[A-968]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
திங்கட்கிழமை 28-7-86

# 'இலங்கையில் தமிழர்மீது சித்திரவதை' காவலிலுள்ள ராமலிங்கத்தின் அமெரிக்க நண்பர்கள் கண்டனம்

வாஷிங்டன், ஞாயிறு :'இலங்கையில் தமிழ மக்கள் சித்திரவதைக்குள்ளாக்கப் படுகின்றனர்'' என அமெரிக்காவிலுள்ள தமிழர் அமைப்பு ஒன்று இலங்கை அரசை குற்றம் சா'ட்டியுள்ளது.

''ராமின் நண்பர்கள்'' என தம்மை அழைததுக் கொள் ளும் இவ்வமைப்பின் குற்றச் சாட்டை அமெரிக்காவிலுள்ள சிங்'ளவர் தமிழர் கவுன்ஸில என்ற அமைப்பு மறுத்து அறிக்கையொன்றை வெளியிட்டிருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இலங்கையில் காவலில் வைக்கப்பட்டிருக்கும்முன்னுள் தூதர் திரு. மாணிக்கலிங்கத்தின் மகனை திரு ராமலிங்கத்தின் விடுதலையை 'ராமின் நண்பர்கள்' என்ற மேற்படி அமைப்பு கோரி வருவதாக தெரிய வருகிறது.

இதனிடையே பிரதமர் திரு. பிரேமதாஸா மசாசூசெட்ஸ் போய்ச் சேர்ந்தார் [ஊ]

## அகதிகள் நிதிக்காக

பண்டத்தரிப்பு, ஞாயிறு

பண்டத்தரிப்பு மக்கள் அவை நிவாரணக்குழு அகதிகள் நிதிக்காக யாழ் பல்கலைக் கழக கலாச்சாரக்குழுவினர் தயாரித்தளிக்கும் மண்சுமந்த மேனியர்-II என்ற நாடகம் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி திறந்தவெளி அரங்கில் ஆகஸ்ட் 3-ம் திகதி பிற்பகல் நடைபெறவுள்ளது. (இ)

## 400 இலங்கையர் வெளிநாட்டில் கைது?

கொழும்பு, ஞாயிறு.

இவ்வாண்டு ஏப்ரல் மாதம் வரை 400க்கு மேற்பட்ட இலங்கையர்கள் போதை வஸ்து கடத்திய குற்றத்திற்காக வெளிநாடுகளில் கைது செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இவர்களில் அரைவாசிப் பேருக்கு மேல் பிரான்சிலும் இத்தாலியிலுமே கைதானதாகவும் அரசாங்கம் கூறுகிறது. (ஊ)

## பிற்மன் 150-வது ஆண்டுநிறைவு: பாரிய ஆங்கிலசுருக்கெழுத்து பயிற்சித் திட்டம்

வல்வெட்டித்துறை திங்கள்

பிற்மன் ஆங்கில சுருக்கெழுத்து 150வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வடமராட்சி சுருக்கெழுத்துப்போதனாசிரியர்குழு, திரு.க சிவச்சந்திரதேவன [சிரேட்ட சுருக்கெழுத்தாளர் வல்வை மக்கள் வங்கி] செல்வி பத்மராதா கந்தையா [பொருளாளர் வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்], செல்வி விஜயலதா ராஜரட்ணம் ஆகியோர் இணைந்து மாபெரும் ஆங்கில சுருக்கெழுத்துப் பயிற்சியளிக்கும் திட்டத்தினை மேற்கொண்டுள்ளனர்.

ஆறுமாதகாலம் (வாரஇறுதியில்) நடைபெறும் இப்பயிற்சி வகுப்புக்களில் கலந்துகொள்ள [இருதடவைகளுககு மேற்படாது) க.பொ.த [சா/த] பரீட்சைகளில் தமிழ், கணிதம் ஆங்கிலம் உட்பட ஆறுபாடங்களிற் சித்தியடைந்த மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

பதிவுக்கட்டணமாக ரூபா 60/- அறவிடப்படும். இப்பயிற்சிக்காக வேறு எதுவித கட்டணமும் அறவிடப்படமாட்டாது. அத்துடன் 1986 ஆவணி க.பொ.த. [உயர்தர] பரீட்சைக்குத் தோற்றுவோருக்கு முன்னுரிமையளிக்கப்படும். இப்பயிற்சிக்குச் சேரவிரும்புவோர் 15 8-86க்கு முன் விண்ணப்பிக்கவேண்டும்.

இப்பயிற்சிவகுப்புக்கள் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் 30 8-86 மு.ப 9 00 மணிக்கும் மல்லாகம் மகாவித்தியாலயத்தில்30 8-86 பி ப. 2 00 மணிக்கும், அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் 31-8-86 பி.ப. 4 00 மணிக்கும் ஆரம்பமாகவுள்ளது.

வடமராட்சியில் பயிற்சி பெற விரும்புபவர்கள் செயலாளர், வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகம், உதவி அரசாங்க அதிபர் பணிமனை, கரவெட்டி என்ற முகவரிக்கும் மல்லாகத்தில் பயிற்சி பெற விரும்புபவர்கள் செயலாளர், மல்லாகம் இளைஞர்கழகம்,மல்லாகம் என்ற முகவரிக்கும் விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அனுமதிமறுப்பு

வவனியா, ஞாயிறு

வவனியா பஸ் நிலையத்திலிருந்து உள்ளூர், வெளியூர்களுக்குப் புறப்படும் வவனியா டிப்போபஸ்களில் பார்சல்கள், மூடைகள் ஏற்றுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

மேற்கொண்டு பார்சல்கள், மூடைகள் ஏற்றுவதாயிருந்தால் பஸ் நடத்துனரே அது பற்றி முடிவுசெய்வாராம். [மா-இ]

## கோபுரம் சேதம்

சுன்னாகம், ஞாறு

வயாவிளான் மத்தியமகா வித்தியாலயத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலால் புன்னாலைக்கட்டுவன் வடக்கு துர்க்கையம்மன் கோவிலின் ஆதிமூலப் பகுதி உடைந்து கோவில் கோபுரப் பகுதி சிதறுண்டு காணப்படுகின்றது. [ஏ

## பாடசாலை தளபாடம் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், திங்கள்.

'யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் மாணவர்களுக்கான கதிரை, மேசைகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.' இவ்வாறு யா/குட்டிப் புலம் அ. த. க. பாடசாலையில் நடைபெற்ற கல்விக்கண்காட்சியைத் திறந்து வைத்துப் பேசுகையில் கோப்பாய் வட்டாரக்கல்வி அதிகாரி திரு ஆ. தங்கராசாகுறிப்பிட்டார். [ச]

## கொழும்பிலிருந்து வவனியா வந்த வங்கி ஊழியர் பற்றி தகவலில்லை!

வவனியா, ஞாயிறு.

வவனியா வருவதற்காக கடந்த 24-ம் திகதி வியாழனன்று கொழும்பிலிருந்து ரயிலில் புறப்பட்ட வவனியா ஹற்றன் நஷனல் வங்கியின் விவசாயப் பிரிவு வெளிக்கள உத்தியோகத்தர் திரு. யோசப் உருத்திரா ராஜதுரை இதுவரை வவனியா வந்து சேரவில்லை என புகார் செய்யப்பட்டுள்ளது.

திரு. ராஜதுரை ரயிலில் அநுராதபுரம வரை வந்ததாகவும் அதன் பின்னரே காணாமல் போயுள்ளதாகவும் தெரிய வருகிறது. இவர் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

இவருக்கு நேர்ந்துள்ள நிலைமை பற்றி அறியுமாறு வவனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் செயளாளா டாக்டர் எஸ் பரராசசிங்கத்திடம் புகார்செய்யப்பட்டுள்ளது.

## இளந்தாய்மீது சூடு வீடும் தீக்கிரை

வவனியா, ஞாயிறு

வவனியா கார்தார் சின்னக்குளத்தில் நேற்றுக்காலை மூன்று குழந்தைகளுக்குத் தாயான பெண் ஒருவர் இனம் தெரியாதவர்களினால் சுடப்பட்டதுடன் அவரது வீடும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் காயமடைந்த திருமதி சரோஜா (30) வவனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காலையில்கணவனை வேலைக்கு அனுப்பிவிட்டு வீட்டிற்குள் இருந்து ரொட்டி செய்வதற்கு மாவைப் பிசைந்துகொண்டிருந்த இவர் வெளியில் சத்தமொன்று கேட்டதைத் தொடர்ந்து வீட்டிற்கு வெளியேவந்து பார்த்தாராம். அப்பொழுது பதுங்கியிருந்த இருவர் இவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன் இவரது வீட்டையும் எரித்தனராம்.

இவரது தொடையிலும் வாயிலும், கையிலுமாக மூன்று சூட்டுக்காயங்கள் காணப்படுகினறன.


நெடுக்குளம் ஊர்காவல் படையினரே இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டிருக்கலாமென சந்தேகிக்கப்படுகின்றது. (ஒ-ஆ)

## தேயிலை விலை மேலும் வீழ்ச்சி!

கொழும்பு, ஞாயிறு

கடந்தவாரம் ஏலவிற்பனையில் இலங்கைத் தேயிலையின் விலை மேலும் வீழ்ச்சியடைந்ததாக அறிவிக்கப்படுகிறது

கடந்த வாரம் ஒரு கிலோ தேயிலையின் சராசரி விலை 25 ரூபா 15 சதமாகும். இது அதற்கு முந்தைய வாரத்தினுடையதைவிட சுமார் 50 சதம் குறைவு. ஊ]



மாணிப்பாய் இந்துக் கல்லூரி மதிய போசன விருந்துபசாரத்தின்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி இ பாலசுந்தரம் உரைநிகழ்த்திக்கொண்டிருப்பதையும், மற்றும் கல்லூரி அதிபர் திரு எஸ். வீ. மகேசவேலு, உயர்தர மாணவர் மன்றத் தலைவர் திரு. ந சுகுமாரன் ஆகியோர் இருப்பதையும் இப்படத்தில் காணலாம்.

## மரண அறிவித்தல்

### A. V. ராஜரட்ணம்

அச்செழுவைச் சேர்ந்த A. V. ராஜரட்ணம் [முன்னாள் லொறி, கார் போக்குவரத்துச் சேவை உரிமையாளர்] காலமானார். அன்னார், காலஞ்சென்ற வேலுப்பிள்ளையினதும் திருமதி செல்லம்மா ஆகியோரின் அன்பு மகனும், புஷ்பமரின் அன்புக்கணவரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று பிற்பகல் [28-7-86] 2-00 மணிக்கு அச்செழுவில் நடைபெறும். உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

[C3739] மனைவி குடும்பத்தினர்.

### செ. இராசா ஜே. பி. [திருநெல்வேலி]

திருநெல்வேலி கேணியடியைச் சேர்ந்த யாழ். சன்மார்க்க பாடசாலை கனிஷ்டபிரிவு ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியரான செ இராசா ஜே பி காலமானார். அன்னார், ஓய்வுபெற்ற ஆசிரியை சின்னத்தங்கத்தின் அன்புக்கணவரும், ராஜ்குமார் [சென்னை] ரஞ்சனா [ஆசிரியை, முத்துத்தம்பி வித்தியாசாலை] ராஜ்மோகன் [சென்னை] ஆகியோரின் தந்தையும்,சங்கீத பூஷணம் பொன் சுந்தரலிங்கம், சாருகேசி(சென்னை), ஆகியோரின் அருமை மாமனாரும், சிவா, செந்தூரன், கானப்பிரியா, ரிஷிகுமார் ஆகியோரின் அன்புப் பாட்டனாருமாவார் அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 29-7-86 செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணியளவில் திருநெல்வேலி செம்பாட்டு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

கேணியடி, பொன். சுந்தரலிங்கம்.
திருநெல்வேலி கிழக்கு. [C 3737]

### திருமதி தங்கராணி ஜெயரத்தினம்

திருமதி தங்கராணி ஜெயரத்தினம் அவர்கள் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்றT W. ஜெயரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும். இரத்தினசூரியர் [பாரிஸ்] டானியல் ஜெயக்குமார் [லண்டன்] ஆகியோரின் அன்புத் தாயாரும், பீஸ்லின் சுவர்ண அவர்களின் அன்பு மாமியாரும், இளைப்பாறிய விரிவுரையாளர் திரு S குலசேகரசிங்கம், இளைப்பாறிய தொழில்நுட்டக் கல்லூரி அதிபர் திரு. S. D. ஜெயசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று 28-7-86 திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ். பொது சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

திரு. திருமதி S. குலசேகரசிங்கம்,
திரு. திருமதி. M. போல்.
14, மூன்றும் குறுக்குத்தெரு.
யாழ்ப்பாணம். [C 3738]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜுலை மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126.